
மறை ஞானப்பேழை
சத்தியம் வந்துவிட்டது !
அசத்தியம் அழிந்து விட்டது !
நிச்சயமாக அசத்தியம் அழிந்தே தீரும் !
September 2023 செப்டம்பர் 2023
Volume - 15, Issue - 7
Retail Selling Price 25
Page 1

# வெளிவந்துவிட்டது!

நாம் மிக ஆவலோடு எதிர்பார்த்திருந்த

**அல் – இக்துத் தரார் ஃபீ ஷரஹிஸ்**

# ஸஹீஹி லில் இமாமில் புகாரீ

(முதல் பாகம்)



சங்கைமிகு குத்புல் ஃபரீத்,

ஜமாலிய்யா அஸ்ஸையித்

யாஸீன் மௌலானா (ரலி)

அவர்கள் அறபு மொழியில் ஆக்கியது.

**விலை ரூ. 1000/ – மட்டும் – (கொரியர் செலவு தனி.)**

**தொடர்புக்கு : 99437 86269 - 99445 76165**

## மறைஞானப் பேழை சந்தா விபரம்

| | |
|---|---|
| உள்நாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 300/- |
| வெளிநாடு ஓராண்டுச் சந்தா | ரூ. 3000 /- |

**சந்தாத் தொகை அனுப்ப, முகவரி மாற்றம், மற்ற விபரங்கள் அறிய தொடர்பு கொள்ள வேண்டிய கை பேசி எண்கள்.**

**Cell : 9597912410 - 9944576165**

## விளம்பரக்கட்டணம்

| | ரூபாய் |
|---|---|
| முழுப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 1000 |
| முழுப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 10000 |
| அரைப்பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 600 |
| அரைப்பக்கம் (ஆண்டு முழுவதும்) | 5000 |
| கால் பக்கம் (மாதம் ஒன்றுக்கு) | 500 |
| கால் பக்கம் (ஆண்டு முழுவதும்) | 4000 |

மறை ஞானப் பேழை

# Be in all and get the power of God

## ஆன்மிக மாத இதழ்

**வெளியிடுவோர்**
அவ்னிய்யா உலக அமைதி அறக்கட்டளை
பாகிரா காம்ப்ளக்ஸ்74, பழனிரோடு.
திண்டுக்கல் - 624 001.

**நிறுவனர்**
குத்புஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலிய்யா
அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா
நாயகம் அவர்கள்.

**ஆசிரியர்**
கலீஃபா. S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ

**சிறப்பாசிரியர்**
கலீஃபா. A.N.M. லியாகத் அலி, B.Sc., B.L.,

**வெளியீட்டாளர்**
J. முஹம்மது ரஹ்மத்துல்லாஹ், B.A.,B.Com.,

**அச்சிட்டோர்**
R. விஜயலட்சுமி
ஸ்ரீ அக்னி அம்மன் அச்சகம்,
52, பழனிரோடு, திண்டுக்கல்.

**கணினி அச்சுக் கோவை**
ரிப்தா கம்ப்யூட்டர்ஸ் செல்: 99445 76165



செய்திகள் அனுப்பவேண்டிய முகவரி

**S. ஹுஸைன் முஹம்மது மன்பயீ**
**(கலீல் கம்ப்யூட்டர் கல்வி மையம்)**
13. எம்.ஆர்.ஆர். நகர்
திண்டுக்கல் - 624 002.
CELL : 99445 76165
Website:www.emsabai.org
email: aalimpulavar07@ gmail.com
email: j.mdrahmathulla@yahoo.com
https:www.emsmedia.net
https:www.awniyyabookstore.com
https:www.yaseenrali.com


# மறை ஞானப் பேழை


முஹர்ரம் - ஸஃபர்

**செப்டம்பர் 2023**
**Volume - 15 Issue -7**


## பேழைக்குள்......


*ஜமாலிய்யா தோட்டத்தில் கொய்த மலர்*
*திருமறைப் பக்கம்.*
*அமுத மொழிகள்.*
*சர்தார் அப்துல் கரீம் ஹள்ரத் (ரஹ்)*
*அப்ஜத் கணக்கு தெரியுமா?*
*சுதந்திர தினம் – குடியரசு தினம்–கொடி–அற்புதம்.*
*அல்லாஹ்வின் அற்புத இறைத் தூதர்.*
*உலகத்தலைவர் போற்றும் உத்தம நபி*
*தலை சிறந்த இரு காரீகள்.*
*அறிவியல் முன்னோடி முஸ்லிம்கள்.*
*அண்ணலைப் போற்றும் அண்ணா.*
*88 ஆம் புனித விழா சொற்பொழிவுகள்*
*பெருமானாரை கனவில் காண.*
*மற்றும் வழக்கமான செய்திகள்.*

# இரண்டு அம்சத் திட்டம்!

அருமை நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அவதரித்த புனித ரபீவுல் அவ்வல் மாதம் அவதரிக்கப் போகிறது.

நாயகக் காதலர்களின் இதயங்களில் இப்போதே வசந்தத்தின் வாடைக்காற்று வீசத் தொடங்கிவிட்டது.

நாடுகளில் நகரங்களில் ஊர்களில் சிற்றூர்களில் மஹல்லாக்களில் தெருக்களில் இந்த ஆண்டு எவ்விதம் மீலாது கந்தூரிகளை சிறப்பாக நடத்தலாம் என ஆஷிகீன்கள் திட்டமிடத் தொடங்கிவிட்டனர்.

நாயகத்தைப் போற்றிப் பேசும் நாவலர்களில் யாரை அழைக்கலாம் என மனதிற்குள் பட்டியல் போடத் தொடங்கிவிட்டனர்.

அல்ஹம்து லில்லாஹ்!

மீலாது விழா ஏற்பாட்டாளர்கள் இந்த ஆண்டு இரண்டு அம்சங்களை விழாக்களில் செய்தல் அவசியமாகிறது.

ஒன்று, மீலாது விழா மத நல்லிணக்க விழாவாக நடத்தப்பட்டு பல்வேறு சமய மக்களையும் அழைத்து, மாற்றுமத அறிஞர்களைப் பேசவைத்து, அண்ணலாரின் அருங்குண மேன்மைகளை அனைவரும் அறியச் செய்ய வேண்டும்.

இரண்டாவது, பெருமானாரின் புற உயர்வுகளைப் பேசுவது மட்டுமின்றி அண்ணலாரின் அகமியத்தை – அவர்கள் யாராக இந்த உலகுக்கு வருகை புரிந்தார்கள் என்ற ரகசியத்தை மக்களுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு உணர்த்த வேண்டும்.

**நாடு இருக்கும் நிலையில் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்த மீலாது மேடைகளின்றி வேறு எந்த மேடையும் பயன்படாது.**

மதங்களுக்கிடையே வெறுப்பை விதைப்பதற்காக ஊரெங்கும் வீதிகளெங்கும் தீய சக்திகள் உத்வேகத்துடன் புறப்பட்டிருக்கின்றன.

அவர்கள் மக்களின் மனங்களில் வெறுப்பு என்னும் கண்ணிவெடிகளை வைத்துக் கொண்டே போகிறார்கள்.

நாம் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அன்பு–அருங்குணம் எனும் ரசாயனத்தைத் தூவி அவற்றை வெடிக்காமல் அழிப்போம்!

*மறைஞானப் பேழை நிறுவனர்*

## அஷ்ஷைகுல் காமில்
## குத்புஸ்ஸமான் ஷம்ஸுல் வுஜூத்
## ஜமாலிய்யா
## அஸ்ஸய்யிது கலீல் அவ்ன் மௌலானா

**அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்கள்**



இவ்வுலகில் சிலருடைய வாழ்க்கை சரியாக – அலங்காரமாக இருக்கலாம்! ஆனால் மறுவுலக வாழ்க்கை என ஒன்று உள்ளதே என்பதை ஒவ்வொருவரும் அறிந்து அகத்தை – உள்ளத்தைத் தூய்மைப்படுத்திக் கொள்ளல் வேண்டும்!

இங்கு எப்படியும் இருக்கலாம் – அங்கு எப்படி இருந்தால் என்ன? என எண்ணக் கூடாது! மறுவுலக வாழ்க்கையை நம்புவதும் ஈமான் –இறை நம்பிக்கையே!

*- சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்கள் -*

# ஜமாலிய்யா தோட்டத்தில்

காலச் சக்கரம் சுழன்று மனிதனிற் பல பேதங்களை உண்டு பண்ணுகிறது. இதிற் பொது மனிதன் திண்டாடுகிறான். ஆனால் காலத்தின் அச்சாணியாய் நிற்கும் தஜல்லி அல்லது குத்பு எனும் ஒப்பற்ற ஒருவர் இதை அவதானித்துக் கொண்டிருக்கிறார். அப்போது அவரின் ரஹ்மத்தைக் கொண்டு திண்டாடுபவர்களை நேர்ப்படுத்துகிறார். நபிகள் நாயத்தின் காலத்திலே முதனப்பிகள் தோன்றி வாதடினார்கள். தோற்றோடினார்கள். இக்காலத்திலும் குத்புமார்களெனச் சிலர் தம்மைச் சொல்லிக் கொள்வர். பல காரியங்களும் தம்மில் நடப்பனவாகக் கூறிக் கொள்வர். ஆனால் அவர்களை அறிந்து பாதிலை விட்டு ஹக்கை அறிந்து கொள்வதே மிக அவசியமாகும். தன்னை மறைத்து குத்பாக வாழ்ந்த குத்புமாரும் இருப்பர். தேவையான சந்தர்ப்பங்களில் அவர்கள் தம்மை வெளியிட வேண்டிய காலம் வந்தபோது வெளியிடுவர். அப்போது எதிர்ப்புகளும் உண்டாகும். எதிர்ப்போர் வழி தவறிவிடுவார்கள்.


*சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள், திண்டுக்கல், வலிய்யுல் கரீம். கலீபா. அல்ஹாஜ். எஸ்.அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு 29/06/1966 எழுதிய பட்டோலையிலிருந்து... (தகவல்: கலீபா. டாக்டர்.அஷ்ரப் அலி ஹக்கிய்யுல் காதிரி)*

எனது கியாலென்னும் உலகம் சில மாதங்களுக்குமுன் செய்த சஞ்சாரத்தின் பலன் உங்கள் கலத்தில் வந்தது. அல்ஹம்து லில்லாஹ்.

உங்களின் இக்கடிதம் வந்த அன்று – வேறொரு விடயமாயும் அன்றையத் தினத்திலே என் கல்பாகிய அர்ஷுல்லாஹ்வில் பெரும் புயலடித்தது. அப்போது இரவு உறக்கம் கொண்டேன். என் உயிரும் என் கண்மணியுமான என் அருமை வாப்பா நாயகத்தைக் கனவிற் கண்டேன். என்றும் போல் கனவில் என் வாப்பா நாயகம் அவர்களுக்கு காதிமாய்க் ( خادم ) காட்சியளித்தேன். அப்போது என் வாப்பா நாயகம் என்னோடு உடலிருக்கும்போது உரையாடுவதுபோல் வாப்பா நான் தான் நீ என்றார்கள். அல்ஹம்து லில்லாஹ். மகிழ்ச்சி கொண்டேன். எனவே என் நாவில் கீழ்க்கண்ட அபூர்வமான பைத்து நடந்தது. இதையும் வாரிதாத்துல் இலாஹிய்யாவில் சேர்த்துள்ளேன். (குறிப்பு: கலத்தில் என்றால் எழுதுகோலில் என்று பொருள்.)

*சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள், திண்டுக்கல், வலிய்யுல் கரீம். கலீபா. அல்ஹாஜ். எஸ்.அப்துல் கரீம் (ஜமாலி) அவர்களுக்கு 2/08/1966 எழுதிய பட்டோலையிலிருந்து...*

(தகவல்: கலீபா. டாக்டர்.அஷ்ரப் அலி ஹக்கிய்யுல் காதிரி)



# கொய்த மலர்

# மொழி பெயர்ப்புகளின் மகுடம்

(சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களின் மொழி பெயர்ப்பு.)

وَاِذْ قَالَ مُوْسٰى لِقَوْمِهٖ يٰقَوْمِ اِنَّكُمْ ظَلَمْتُمْ اَنْفُسَكُمْ بِاتِّخَاذِكُمُ الْعِجْلَ

அப்போது, மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்கள் அவர்களின் கூட்டத்தாருக்கு என் கூட்டத்தினரே நீங்கள் ஒரு காளைக் கன்றினை (இறைவனாக, வணக்கத்திற்கு)ப் பற்றிக் கொண்டு உங்களுக்கே நீங்கள் அநியாயம் செய்து கொண்டீர்கள்.

فَتُوْبُوْٓا اِلٰى بَارِئِكُمْ

உங்களை சிருட்டித்த இறைவன்பால் (செய்த) பாபத்திற்கு மன்னிப்புக் கேளுங்கள்.

فَاقْتُلُوْٓا اَنْفُسَكُمْ

1. நீங்களே (உங்களுக்குள் உள்ள குற்றங்களுக்காக) உங்கள் தங்களையே பலிகொடுத்துக் கொள்ளுங்கள்.

2. (உங்களுக்குள் குற்றம் செய்தவர்களை) நீங்கள் உங்களுக்குள்ளேயே கொலை செய்து கொள்ளுங்கள்

ذٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ عِنْدَ بَارِئِكُمْ

உங்கள் சிருஷ்டி கருத்தாவிடத்து அது உங்களுக்கு நன்மை பயக்கும்.

فَتَابَ عَلَيْكُمْ

அவன் உங்களை மன்னித்தான்.

اِنَّهٗ هُوَ التَّوَّابُ الرَّحِيْمُ ۝ ٥٤

நிச்சயமாக அவனே மிக மன்னிப்போனும் காருண்யனுமாவான்.

وَإِذْ قُلْتُمْ يٰمُوسٰى لَنْ نُّؤْمِنَ لَكَ حَتّٰى نَرَى اللّٰهَ جَهْرَةً

மேலும், நீங்கள் “மூஸா (அலைஹிஸ்ஸலாம்) அவர்களே, அல்லாஹ்வை நாம் பிரத்தியட்சமாகக் காணும் வரை உங்களை நாம் விசுவாசங் கொள்ள மாட்டோம்” என்று கூறினீர்கள்.

فَأَخَذَتْكُمُ الصّٰعِقَةُ وَأَنْتُمْ تَنْظُرُوْنَ ۝ ٥٥

நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே இடியின் வேதனை, மிகச் சப்தம், உங்களைத் தொற்றிக் கொண்டது.

(18) ثُمَّ بَعَثْنٰكُمْ مِّنْ بَعْدِ مَوْتِكُمْ

உங்கள் இறப்புக்குப் பின்னால் உங்களை (உயிர் கொடுத்து) எழுப்பினோம்.

لَعَلَّكُمْ تَشْكُرُوْنَ ۝ ٥٦

நீங்கள் நன்றி பாராட்டப் போதும்.

ظَلَّلْنَا عَلَيْكُمُ الْغَمَامَ

மேகத்தை உங்கள் மீது நாம் நிழல் கொடுக்கச் செய்தோம் (நிழற்றச் செய்தோம்).

وَأَنْزَلْنَا عَلَيْكُمُ الْمَنَّ وَالسَّلْوٰى

உங்களுக்கு “மன்”னையும் “ஸல்வா”வையும் நாம் இறக்கிவைத்தோம்.

كُلُوْا مِنْ طَيِّبٰتِ مَا رَزَقْنٰكُمْ

நாம் உங்களுக்கு உணவாக அருளிய நல்லவற்றிலிருந்து உண்ணுங்கள்.

وَمَا ظَلَمُوْنَا

அவர்கள் நமக்கு அநியாயம் செய்யவில்லை.

وَلَٰكِن كَانُوٓا۟ أَنفُسَهُمْ يَظْلِمُونَ ٥٧

எனினும் அவர்கள் தமக்கே அநியாயம் செய்கிறவர்களாயினர்.

(ஆ.கா. அப்துல் ஹமீது பாக்கவி அவர்களின் மொழி பெயர்ப்பு)

54. இன்னும் (நினைத்துப் பாருங்கள்.) மூஸா தம் சமூகத்தினரை நோக்கி என் சமூகத்தாரே நீங்கள் காளைக்கன்றைத் (தெய்வமாக) எடுத்துக் கொண்டதால் (பகுத்தறிவுடைய) நீங்கள் (கேவலம் ஒரு மிருகத்தை வணங்கி) உண்மையாகவே உங்களுக்குத் தீங்கிழைத்துக் கொண்டீர்கள். நீங்கள் மனம் வருந்தி உங்களைப் படைத்தவனிடம் மீண்டு உங்(களிலுள்ள வரம்பு மீறியவர்)களை நீங்களே கொன்று விடுங்கள். இதுதான் உங்களைப் படைத்தவனிடம் உங்களுக்கு நன்மைதரும். என்று கூறினார். ஆகவே (அவ்வாறே நீங்களும் செய்ததனால்) உங்களை (அல்லாஹ்) மன்னித்துவிட்டான். நிச்சயமாக அவன்தான் மிக மன்னிப்பவன். மகாக் கருணையாளன் ஆவான்.

55. மேலும், நீங்கள் மூஸாவை நோக்கி நாங்கள் அல்லாஹ்வைக் கண்கூடாகக் காணும்வரை உங்களை நம்பவே மாட்டோம் என்று கூறிய பொழுது, நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே உங்களை (பூகம்பம் போன்ற) பெரும் சப்தம் பிடித்துக் கொண்டது.

56. நீங்கள் (அந்தப் பெரும் சப்தத்தால்) இறந்துவிட்டதற்குப் பின்னும் நீங்கள் நன்றி செலுத்துவீர்கள் என்பதற்காக உங்களை நாம் உயிர்ப்பித்தோம்.

57. மேலும், நாம் உங்களுக்கு மேகம் நிழலிடும்படிச் செய்து உங்களுக்கு (உணவாக) மன்னு –ஸல்வா(என்ற இருவகை உண)வையும் இறக்கி வைத்து (அவர்களை நோக்கி) நாம் உங்களுக்கு அளித்துவரும் பரிசுத்தமான இவற்றைப் புசித்து வாருங்கள் என்று கட்டளையிட்டிருந்தோம். (எனினும் நம் கட்டளையை மீறிய) அவர்கள் நமக்கொன்றும் தீங்கிழைத்துவிடவில்லை; தங்களுக்குத்தாமே அவர்கள் தீங்கிழைத்துக் கொண்டனர்.

தாய் பாலூட்டி வளர்ப்பது

கொஞ்ச காலம்!

நோய் மருந்தூட்டி வளர்ப்பதுவோ

மிச்ச காலம்!

*(கவிஞர். ஈரோடு– தமிழன்பன்.)*

# திருக்குறள்

**நயனிலன் என்பது சொல்லும் பயனில**

**பாரித்து உரைக்கும் உரை.**

பயன் இல்லாத ஒன்றைப் பற்றியே விரிவாகப் பேசும் ஒருவனது பேச்சானது அவன் நல்ல பண்பில்லாதவன் என்பதை உலகுக்கு அறிவிக்கும்.

(193).

## இரு மாதச் சிறப்பு தினங்கள்

**مُحَرَّم**

**முஹர்ரம்**

| பிறை | |
|---|---|
| 1 | ஹிஜ்ரி ஆண்டு பிறப்பு |
| 5 | பாபா ஃபரீதுத்தீன் கன்ஸெஷக்கர் (ரஹ்) மறைவு |
| 6 | ஜகரிய்யா (அலை) மறைவு |
| 10 | இமாம் ஹுஸைன் (ரலி) பிரணாத்தியாகம், ஆஷூரா தினம் |
| 18 | இமாம் ஜைனுல் ஆபிதீன் (ரலி) மறைவு |
| 29 | ஷாஹ் வலிய்யுல்லாஹ் (ரஹ்) மறைவு |

**صَفَر**

**ஸஃபர்**

| பிறை | |
|---|---|
| 5 | ஸதக்கத்துல்லா அப்பா (ரஹ்) மறைவு |
| 10 | கமுதி முஸாபிர் வலி (ரஹ்) உரூஸ் |
| 14 | காயல் தைக்கா சாஹிபு (ரஹ்) மறைவு |
| 17 | கொடிக்கால் பாளையம் அப்துல் மஜீது ஸூஃபி (ரஹ்) உரூஸ் |
| 28 | இமாம் ஹஸன் (ரலி) ஷஹீது |

## இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்

சங்கமிகு செய்கு நாயகம் அவர்களின் அன்பு முரீதும், மூத்த ஆத்மசகோதரரும், சென்னை அடையாறு குராஸானி பீர் பள்ளிவாசல் முன்னாள் செயலாளரும், செய்யது மக்தூம் பாஷா ஹ.காதிரி அவர்களின் தந்தையும், பேரின்பப்பாதை நூலுக்கு மதிப்புரை வழங்கியவரும், ஆரம்ப காலங்களில் சங்கைமிகு செய்கு நாயகம் அவர்களை தம் இல்லத்தில் தங்கச் செய்து சேவை செய்தவரும், நமது மதுரஸா, வாப்பா நாயகம் அவர்களின் இல்லத்திற்கு வரைபடம் வகுத்துக் கொடுத்தவருமான எஞ்சீனியர் டாக்டர் மொய்தீன் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் 4.8.2023 அன்று இறையடி சேர்ந்தார்கள். அன்னாருக்கு அல்லாஹ் மறுமை வெற்றிகளை அருள்வானாக!

சங்கைமிகு ஷைகு நாயகம் அவர்களின்

# அமுத மொழிகள்



நமது ராதிபதுல் ஹக்கிய்யத்துல் காதிரிய்யாவை ஒவ்வொரு மாதமும் பிறை 14 இல் அவசியம் ஓதிவாருங்கள். அனைவரும் ஒன்று சேர்ந்து ராத்திபு ஓதிவாருங்கள். அதேபோன்று உங்கள் வீடுகளிலும் அவசியம் ஓதிவாருங்கள். அவ்வாறு ஓதி வருவதால் நிறைய பரகத்துகள் உண்டாகும். ராதிபில் நிறைய திக்ருகள் உள்ளன. அவற்றை நீங்கள் ஓதிவருவதால் அநேக நன்மைகள் உண்டாகும்.

## புனிதமிகு மவ்லித் ஷரீஃப்

**அதேபோன்று ரபீஉல்அவ்வல் மாதம் முழுவதும் சுப்ஹான மவ்லித் ஓதி வாருங்கள். ரபீவுல் ஆகிர் மாதத்தில் குதுபு நாயகம் (ரலி) அவர்களின் மவ்லித் ஷரீபை ஓதி வாருங்கள்.**

மவ்லித் ஷரீப்கள் ஓதிவருவதால் உங்களுக்கு எந்த ஆபத்துகளும் வரப்போவதில்லை. காலத்திற்குரிய மவ்லித்களை ஓதிவந்து – பின்னர் அவற்றை ஓதாமல் விட்டு விட்டதால் எத்தனையோ பேர் பெரும் பெரும் கஷ்டங்களை அனுபவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களை நாமே கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். எனவே, மவ்லித் ஷரீப்களை அவசியம் ஓதி வாருங்கள்!

## மவ்லிதின் அவசியம்!

மற்றவர்களைப் போல் நாம் இருக்க வேண்டிய அவசியமில்லை. நமக்கு மவ்லித் மிக முக்கியம்.

மவ்லிதில் என்ன சொல்லப்பட்டிருகிறது? ரசூல் (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு! ரசூல் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாடப்பட்டுள்ளன!

அவர்களைப் பொய்யாகப் புகழ்ந்து பாடப்படவில்லையே?

ரசூல் (ஸல்) அவர்கள் சிறப்பிற்குரியவர்கள் மேன்மைக்குரியவர்கள்! மற்ற எல்லா நபிமார்களிலும் ரசூல் நாயகம் (ஸல்) அவர்கள் மேலானவர்கள்!

எல்லா நபிமார்களுக்கும் கொடுக்கப்பட்ட ஒட்டுமொத்த வணக்கங்களும் ரசூல் (ஸல்) அவர்களுக்குக் கொடுக்கப்பட்டன. அத்தகைய எல்லா வணக்கங்களைத் தாம் நாம் வணங்கி வருகிறோம்!

ஒரு கூட்டம் நின்று வணங்கினார்கள்; ஒரு கூட்டம் ருகூவு செய்து வணங்கினார்கள்; ஒரு கூட்டம் ஸஜ்தாவில் வணங்கினார்கள்! – இவையனைத்துமே நமக்கு வணக்கங்கள் ஆக்கப்பட்டு முழுமையான வணக்கங்களைச் செய்யக் கூடியவர்களாக நம்மை வாழச் செய்த – மனிதனை மனிதனாக வாழச் செய்த வள்ளல் நபி (ஸல்) அவர்களை ஏன் புகழக்கூடாது?

மாக்களாக விருந்த மக்களை நன்மக்களாக வாழச் செய்வர்களை வாயாரப் புகழ்வதில் என்ன தீங்கு வந்துவிடப் போகிறது?

எனவே, ரசூல் (ஸல்) அவர்களை எங்களால் புகழாமல் இருக்க முடியாது! அவசியம் புகழத்தான் வேண்டும்.

ஆகவே, புகழான மவ்லிதை அவசியம் ஓதி வாருங்கள்!

அதேபோல குத்புநாயகம் (ரலி) அவர்களின் மவ்லிதுகளையும் ஓதி வாருங்கள். எங்கள் குதுபு நாயகம் (ரலி) அவர்கள் தாம் இறந்துபோன (தீனை) சமுதாயத்தை உயிர்ப்பித்துக் கொடுத்தார்கள்!

**கஷ்ட நிவாரணி!**

பத்ரு ஸஹாபாக்களுடைய மவ்லிதை அந்தந்த காலக்கட்டத்தில் ஓதி வாருங்கள். உங்களுக்குக் கஷ்டம் ஏற்படக் கூடிய நேரத்தில் அவசியம் பத்ரு ஸஹாபாக்கள் மவ்லித் ஷரீஃபை அவசியம் ஓதி வாருங்கள்!

வெள்ளிக்கிழமை – திங்கட்கிழமை இரவுகளில் ஓதுங்கள்!

வீடுகளை அலங்காரம் செய்யுங்கள்! மணமான பொருட்களை வைத்துக் கொள்ளுங்கள்!ஊதுபத்திகளை கொளுத்தி மணம் வீசச் செய்யுங்கள்! உங்கள் இல்லங்களில் பரகத் பெருகும்!

# அமுத மொழிகள்

■ ஒரு காலமும் ரசூல் (ஸல்) அவர்கள் புகழை மறைக்க முடியாது. தூசியால் சூரியனை மறைக்க முடியுமா? இவர்கள் (வஹாபிகள்) சத்துருக்கள் போல திடீரெனத் தோன்றி அலங்காரமாகத் தெரிவார்கள். பின்னர் அழிந்து போவார்கள். நிலைத்து நிற்க இயலாது.

■ ஏகத்துவ மெய்ஞ்ஞான சபையினர் தான் முழு முஸ்லிம்கள், சபை முன்னேற வேண்டும். எல்லோரும் விளங்க வேண்டும். எல்லோரும் ஒவ்வொரு படியாக உயர்ந்து அந்த தரத்தை கூட்டிக் கொள்ள வேண்டும். எங்கள் பிள்ளைகள் எல்லோரும் முயற்சியோடு இருந்தால் வஹாபியத்து எல்லாம் எடுபட்டுப்போகும்.

■ ரசூலுல்லாஹ்வுக்கு எவ்வளவு கந்தூரி வேண்டுமானாலும் கொடுக்கலாம். எவ்வளவு வேண்டுமானாலும் புகழலாம். இதனை அல்லாஹ் பொருந்துவான். ரசூலுல்லாஹ்வை புகழ்வதால் அல்லாஹ் நரகில் போட்டு விடுவானா. அப்படி நரகில் போட்டாலும் நரகமும் சொர்க்கமாகும்.

■ ரசூலுல்லாஹ் அப்து என்றால் அல்லாஹ்வுக்கு இணக்கமான அப்து. சாதாரணமாக உபயோகிக்கின்ற அடிமை என்ற அர்த்தத்தில் வராது.

❖ **ச**லவாத்து ஓதுவதில்தான் அனைத்துமுள்ளன. குறைந்த பட்சம் "ஸல்லல்லாஹு அலா முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்" என்றாவது ஓதிக்கொள்ள வேண்டும்!

❖ இன்னல்லாஹ வமலாயிகதஹு -நிச்சயமாக அல்லா(ஹ்)வும் மலாயிகாமார்களும்) நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் மீது சலவாத்துக் கூறுகிறார்கள் எனக் குர்ஆனில் கூறப்பட்டுள்ளது. அதில் மாபெரும் இரகசியம் அடங்கியுள்ளது.

❖ பாங்கு சொல்லப்பட்டவுடன் ஓதப்படும் துஆவில்" அல்லாஹும்ம ரப்ப ஹாதிஹித் தஃவதித் தாம்மதி வஸ்ஸலாதில் காயிமதி..." என்பதோடு இப்பொழுதெல்லாம் சிலர் நிறுத்திக் கொள்கிறார்கள். " ஆத்திசய்யிதனா..." எனத் தொடர்ந்து ஓதுவதில்லை. அந்த அளவிற்கு சலவாத்து ஓதுவதைக் குறைத்துக் கொள்கிறார்கள்! இவ்வாறு சலவாத்துச் சொல்வதை நிறுத்தி விடுவதாலேயே உலக முஸ்லிம்களிற் பலரும் பல கடுமையான, கொடுமையான சோதனைகளுக்கும் அழிவிற்கும் ஆளாகிறார்கள்.

படித்தேன்
பகர்கிறேன்.

உள்ளம் கவரும்

# உமர் ரலி புராணம்

**ஆடினர் பாடி நின்றார்**
**அறிவற மதுவ ருந்தி**
**சாடினர் கொலை புரிந்தார்**
**சதமுமே கொள்ளை மற்றும்**
**நீடுற மாதி னின்பம்**
**நித்தமுஞ் சுகித்து நின்றார்**
**கேடுற வாழ்ந்து நாட்டைக்**
**கெடுத்தனர் மாந்த ராமே.**

**பொருள் :**

கட் குடித்துத் தன்னறிவற்றுப் போன நிலையில் ஆடி நின்றவர்கள் பாடியும் நின்றனர். அவர்களுக்கிடையே மோதிக் கொண்டனர். கொலைகள் புரிந்தனர். எப்போதும் மக்களிடத்துக் கொள்ளையும் புரிந்தனர். மேலும் சதா அதிக காலம் பெண்டிர் இன்பத்திலே ரசித்து நின்றனர். அம்மக்கள் கெட்டுப் போகுமாறு வாழ்ந்து நாட்டையும் கெடுத்தனர்.

மதுவருந்தும் மனிதன் என்னென்ன செய்வான் என்பதை இப்பாடல் தெளிவாக உரைக்கிறது.

1. தன்னறிவற்றுப் போகும். அதாவது சுயநினைவில்லாமல் போவான்.

2. ஆடுவான், பாடுவான்.

3. வீண்சண்டையிட்டு மோதிக்கொள்வான்.

4. கொலை செய்வான், கொள்ளையும் அடிப்பான்.

5. எப்போதும் மகளிர் இன்பத்தில் மூழ்கிப்போவான்.

அறபு மக்கள் இவ்வாறு கெட்டுப்போய் நாட்டின் பெருமையையும் கெடுத்து வாழ்ந்தனர்.

**நடம்புரி கடக மென்ன**
**நடையது நேரி லாது**
**தடம்புரள் மக்க டம்மால்**
**தளர்ந்தது நாட்டு யர்வு**
**படம்விரி பாந்த ளென்ன**
**பகையவர் பரந்து வாழும்**
**இடமென மதிநா மக்கா**
**விருந்தன நேரி லாதே.**

## பொருள் :

கூத்தாடிப் பக்கமாய் நடக்கின்ற நண்டு போலும் நடையது நேராக வில்லாது வரம்பு புரண்டு நடக்கும் மக்கள் தம்மால் நாட்டின் உயர்வு பலவீன மடைந்தது. படத்தை விரித்துக் கொண்டிருக்கும் நாகம் போலும் பகைவர்கள் பரந்து வாழும் இடமென்று மதினாவும் மக்காவும் ஒழுங்கிழந்திருந்தன.

அப்படிக் குடித்துக் கூத்தடித்த மக்கள் எப்படி நடந்தார்கள் என்பதை இப்பாடல் நயமாக எடுத்துரைக்கிறது. போதை மயக்கத்தால் அவர்கள் நண்டுகள் நடப்பதுபோல சாய்ந்து சாய்ந்து நடந்து, வரை முறையின்றி வாழ்ந்து வந்தனர்.

நண்டுகள் ஓரிடத்தில் நிற்காது. நடந்தால் நேராகவும் நடக்காது. அக்காலத்தில் நண்டு விற்பவர்கள் நாழி என்னும் படியில் அளந்து போடுவர். அதை அளப்பதற்குள் படாத பாடு படவேண்டியிருக்கும். மனம் ஒரு நிலையில் இல்லாமல் ஓடுவதை நண்டளந்திடும் நாழியாவனோ என குணங்குடியார் பாடுவார்.

மக்கள் சீராக நடக்காததால் நாட்டின் உயர்வு பலகீனமானது. மேலும் படம் விரித்துக் கொத்துவதற்குக் காத்திருக்கும் பாம்புகள் போல, பகைவர்கள் நாடெங்கும் பரவி யிருந்தனர். புனித நகரம் என மக்கள் மதித்த மக்காவிலும், அமைதியான பண்பு கொண்டவர்கள் வாழும் மதீனாவிலும் இந்நிலை தொடர்ந்ததால் நாடே ஒழுங்கின்றி இருந்தது. *விளக்கம்– கலீபா. ஆலிம்புலவர்*

---

**மறைஞானப்பேழை சந்தா செலுத்திவிட்டீர்களா?**

*(சங்கைமிகு குத்புல் ஃபரீத், ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா (ரலி) அவர்களின் வானொலிப் பிரசங்கமான "அறபு இலக்கிய வளர்ச்சி" எனும் நூல் தேடற்கரிய செய்திகளைக் கொண்ட தகவல் களஞ்சியமாக இருப்பதால் அதன் முக்கியப் பகுதிகளைத் தொடராக வெளியிடுதில் மகிழ்ச்சியடைகிறோம். வாசகர்கள் படித்துப் பயன் பெறுவார்களாக.)*

# அறபு இலக்கிய வளர்ச்சி

## இலக்கியச் சரித்திரப் பிரிவுகள்

இலக்கியச் சரித்திரம் எல்லாச் சமூகங்களி னுடையவும் அரசியல், ஜனாசார (SOCIAL) சரித்திரங்களின் சம்பந்தத்தைப் பலப்படுத்துகிறது. இவ்விரு சரித்திரங்களும் ஒன்றுக் கொன்று உதவியாக விருக்கின்றன. எனினும், இலக்கியச் சரித்திரம் சிந்தனை போலவும், அரசியல், ஜனாசார சரித்திரங்கள் செயல் போலவுமாகின்றன. அரசியல் கிளர்ச்சி அல்லது ஜனாசார எழுச்சி முதலாயின சிந்தனைக் கிளர்ச்சியினாலேயே உண்டாகின்றன. சிந்தனை புலவர்களின் நாக்களிலிருந்தும் அறிஞர்களின் பேனாக்களிலிருந்தும் உற்பத்தியாகி மனித மனப்போக்கை மாற்றி அவர்களிடையே எழுச்சியை அல்லது கிளர்ச்சியை உண்டுபண்ணி விடுகிறது. எனவே, அரசியல் அல்லது ஜனாசார எழுச்சிக்கும்கிளர்ச்சிக்கும் இலக்கியமே ஒருவாறு காரணம் ஆகிறதனால் அரசியல் சுதந்திரத்திற்கும் சமய மேம்பாட்டிற்கும் இலக்கியம் ஜீவ நாடியாகிறது. அறபிய இலக்கியச் சரித்திரத்தை ஐந்து காலங்களாகப் பிரித்து அறபிய இஸ்லாமிய சமூகங்கள் அரசியல் ஜனாசாரப் புரட்சிகளினால் அடைந்த எழுச்சி, வீழ்ச்சி என்பனவற்றை விளக்கி அத்துடன் அறபி இலக்கியத்தின் சம்பந்தம் ஆகியவற்றையும் விளக்குகின்றனர் அறபிய இலக்கிய அறிஞர்கள்.

### 1. அஞ்ஞான காலம்

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் மத்தியிலே யமனிய ஏகாதிபத்தியத்திலிருந்து அத்னானியர் சுதந்திரம் பெற்றதிலிருந்து ஆரம்பித்து இஸ்லாத்தின் வரவோடு முடிவடைகிறது. (கி.பி : 622)

## ௨. இஸ்லாமிய ஆரம்ப காலமும் உமவிய ஏகாதிபத்தியமும்:

*இஃது இஸ்லாமுடன் ஆரம்பமாகி அப்பாஸிய ஏகாதிபத்திய ஆரம்பத்துடன் முடிவடைகிறது. (ஹி : 132)*

## ௩. அப்பாஸிய காலம்:

*அப்பாஸிய ஏகாதிபத்திய ஆரம்பகாலம் முதல் தாத்தாரியர் கையில் பக்தாது விழ்ச்சியடைந்தது வரை. (ஹி : 656)*

## ௪. துருக்கிய காலம் :

*பக்தாது வீழ்ச்சியடைந்தது முதல் துருக்கி தேசப் புதிய எழுச்சிவரை (ஹி : 1220)*

## ௫. புதிய காலம்:

*முகம்மது அலி பாஷா எகிப்தில் அதிகாரத்திற்கு வந்தது முதல்.*

## அறபுகளும் அவர்களின் இடங்களும் தரங்களும் அன்னோரின் பிரபல குடும்பங்களும்.

*சரித்திராசிரியர்களும் குறிப்பாக பிரடெரிக் சிலோசர் என்ற ஜர்மானியப் பிரபல சரித்திராசிரியரும் மனிதரில் ஸாமிய்யர் (நபி நூஹ் (அலை) அவர்களின் மகன் ஸாமின் வமிசத்தார்) என்று ஒரு வகுப்பினரைப் பிரித்து அந்த ஸாமிய்யரில் அறபுகளும் ஒரு சமூகமாவர் என்று கூறினர். ஏனைய ஸாமிய்ய சமூகத்தவர்கள், பாபிலோனியர், அசூரியர், அப்ரானியர், பினீசியர், ஆராமியர், அபிஸீனியர் ஆகியவர்களாவர். இவர்கள் எல்லாரும் ஒரே இடத்தில் குடியிருந்து, அங்கேயே பெருகி, அங்கிருந்தே பிரிந்து கொண்டிருந்தனர். அந்த இடம் எதுவென்று குறிப்பிட்டதில் சரித்திர ஆசிரியர்கள் மத்தியிலே அபிப்பிராய பேதங்கள் உண்டு. சிலர் அஃது இராக் என்றும் சிலர் அறபிய தீபகற்பம் என்றும் வேறு சிலர் அபிசீனியா வென்றும் கூறினர். ஸாமிய்யூன்களின் ஆரம்ப இடம் ஏதாயிருப்பினும் அவர்கள் (பிரிவுபட்ட ஸாமிய்ய சமூகங்கள்) மிகப் பூர்வீக காலத்திலேயே அதைவிட்டுப்போய் பாபிலோனியர்களும் அசூரியர்களும் இராக்கிலும், பினீசியர்கள் சீரியாக் கடற்கரைப் பகுதியிலும், அப்ரானியர்கள் பலஸ்தீனிலும், அபிஸீனியர்கள் அபிஸீனியாவிலும், அறபுகள் அறபிய தீபகற்பத்திலும் குடியேறினார்கள்.*

அறபிய தீபகற்பம் ஆசியாவின் தென்மேற்குப் பகுதியிலிருக்கிறது. வடக்கே சீரியாவும் கிழக்கே யூப்ரடீஸ் நதியும் இந்துமா சமுத்திரத்தின் ஒருபகுதியும், தெற்கே இந்துமா சமுத்திரமும், மேற்கே செங்கடலும் அதன் எல்லைகளாகும். பின்பு, யமனிலிருந்து சீரியாவின் நாட்டுப்புற ஓரங்கள் வரை நீண்டுள்ள "ஸராத்" மலைத்தொடர் அதைக் கிழக்குப்பகுதி மேற்குப் பகுதி என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கிறது. மேற்குப் பகுதி "ஸராத்" மலைத் தொடரின் மேற்குப் பகுதியிலிருந்து செங்கடற்கரை வரையுள்ளது. அது பணிந்த இடமாதலால் அதற்கு "கூர்" (غور) என்றும், உஷ்ணமாகவிருப்பதால் அதற்குத் " திஹாமா" என்றும் பெயரிட்டனர். கிழக்குப் பகுதி, கிழக்கிலிருந்து இராக்கின் ஓரமாகச் சென்று "ஸமாவா" வரை உயர்ந்து பரந்துள்ளது. அப்பகுதி உயர்ந்துள்ளதால் அதனை "நஜ்து" என்று கூறினர்."கூர், நஜ்து" ஆகிய இரு பகுதிகளுக்கும் மத்தியிலுள்ள பகுதியை ("கூர், நஜ்து" ஆகிய இரு பகுதிகளுக்கும் இடையிலிருப்பதால்) " ஹிஜாஸ்" என்று கூறினர். "நஜ்து"க்குக் கிழக்கே பாரசீகக் குடாக் கடல்வரையுள்ள "யமாமா"ப் பிரதேசத்தில் "பஹ்ரைனும்" "உம்மானு"ம் அடங்கியுள்ளன. இவை "நஜ்துக்கும்" "யமனு"க்கும் மத்தியிலிருத்தலால் "அரூள் " என்று பெயர் கூறுவர். ஹிஜாஸுக்குப் பின்னால் தெற்குவரை நீண்டுள்ள பகுதிக்கு, அது பரிசுத்த கஃபாவின் வலப்பக்க மிருத்தலால் அல்லது அதன் வளத்திற்காக "யமன்" என்று பெயர் கொடுத்தனர்.

இப்பகுதிகளில் " கஹ்தான்", " அத்னான்" ஆகிய இரு சமூகங்களும் பிரிந்து வாழ்ந்தனர். "கஹ்தானிய் யூன்" கள் யமனில் குடியேறினார்கள். அங்கே அவர்களுக்குப் பெருமை பொருந்திய மாளிகைகளும் சிறந்த நாகரிகமுமிருந்தன. அவர்களின் சிறப்பான இடங்கள் வறண்டுபோன பின்பு வேறு பல பகுதிகளுக்கும் குடிபெயர்ந்து சென்றார்கள். அவர்களில் (கஹ்தான்களில்) " கஹ்லான்" " ஹிஜாஸ்" பக்கம் சென்று மதீனாவிலே யூதர்களை வென்றார். அவர் வமிசத்தில் "ஔஸ்", "கஸ்ரஜ்" என்ற இரு வமிசங்கள் தோன்றின. "குஸாஆ"க்களிலுள்ள " ஹாரிதாபின் அம்று " என்பார் ஹரமில் (மக்காவில்)குடியேறினார். "இம்ரான் பின் அம்று " என்பார் அமானிலே குடியேறினார். அவர் மக்கள் "அஸ்து அமான் " என்று கூறப்பட்டனர். " நஸ்று பின் அல் அஸ்தி"ன் குடும்பம் திஹாமாவில் குடியேறியது. அவர்கள் "அஸ்து ஷனூஆ" வெனக் கூறப்பட்டனர். "ஜப்னத் பின் அம்ரி" ன் பிரயாணக் கூட்டம் சீரியாவில் தங்கியது. அவரும்

*அவர்மக்களும் அங்கேயே தங்கினர். பிரபல "கஸாஸினா" கூட்டத்தினரும் அவர்களைச் சேர்ந்தவராவர். "பனூ லகம்" (لخم) "ஹைரா"வில் குடியேறினர். "முன்திர்" வமிசத்தைச் சேர்ந்த "நஸ்று பின் றபீஆ" அக்கூட்டத்தைச் சேர்ந்தவராவர். அத்னானிய்யூன்கள் ஹிஜாஸிலும் அதையடுத்துள்ள இராக்கின் செழிந்த பகுதிகள் வரையும் குடியேறினார்கள்.*

## முதல் மரியாதை

அஸ்பாபுன் நுஜூல் நூலில் அல்வாஹிதி அவர்கள் குறிப்பிடுகிறார்கள்:

முஉமின்களே! நீங்கள் நபியிடம் பேசும் முன்பாக ஏதேனுமொரு தர்மத்தை முற்படுத்திவையுங்கள். இதுவே உங்களுக்கு சிறந்ததும் பரிசுத்தமானதுமாகும். (58/12) என்ற ஆயத்தைக் குறித்து ஹள்ரத் அலீ (ரலி) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

அல்லாஹ்வின் அருள் மறையில் ஒரு வசனம் உள்ளது. அதனை என் முன்னிலையிலும் – நான் இல்லாத நேரத்திலும் யாருமே அமுல் படுத்தவில்லை, என் ஒருவனைத்தவிர. என்னிடத்திலிருந்த தங்கத்தின் துண்டுகளை வெள்ளித் துண்டுகளாக மாற்றி அது தீரும் வரை அதனை ஒவ்வொரு முறை நபிகளாரிடம் பேசும் முன்பும்– ஒவ்வொன்றாக சதகா செய்துவந்தேன். பின்னர் இந்த நியதி 58–13 ஆம் வசனத்தின் மூலம் ரத்து செய்ப்பட்டது.

## யார் சுமப்பார்?

கடைசிவரை யார்தான் உன் பாரத்தைத் தொடர்ச்சியாக சுமக்கப்போகிறார்கள், கடைசிப் பயணத்தில் கூட உன் ஜனாஸா பாரத்தை தோள்களில் மாற்றி மாற்றித்தான் சுமந்து போகிறார்கள். *–உருதுக் கவிஞர் மிர்ஸா காலிப்–*

### இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

ஆருயிர் செய்கு நாயகம் அவர்களின் முரீதாவும், பாக்கம் கோட்டூர் மர்ஹூம் ஜனுத்தீன் அவர்களின் மகளாரும், குவைத் ஏகத்துவ மெய்ஞ்ஞான சபைத் தலைவர் அப்துல் ஹமீது (பாகவி) அவர்களின் சகோதரியும், மர்ஹூம் முஹம்மது சலீம் அவர்களின் துணைவியாருமான ரஹ்மத்துன்னிஸா ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்வஃபாத்தானார்கள். அல்லாஹ் அன்னாரின் பிழைகள் பொறுத்து சுவனப் பேற்றினை அருள்வானாக! ஆமீன்!

7

# அருள் மறை அதிசயம்

**கலீபா. டாக்டர். எஸ்.ஏ.அஷ்ரப் அலி ஹக்கிய்யுல் காதிரிய். எம்.டி.டி.எம்.**

பிழை திருத்தம்.

*2023 ஆகஸ்ட் இதழில்...*

*கொல்வது, அச்சிங்கத்திற்கு மனிதன் ஒரு பொருட்டில்லையென்பதால், விட்டு விடுவதும் அதற்கு மனிதன் ஒரு பொருட்டில்லையென்பதால்*

*என்பதற்கு பதிலாக...*

*கொல்வது அச்சிங்கத்திற்கு மனிதன் ஒரு பொருட்டில்லை யென்பதால்*

*என்று மட்டும் வந்துள்ளது.*

---

அதற்கு அவ்வலீ சிரேஷ்டர் இவ்வாறு கூறினார்கள்: " நேற்று இரவு என்னுடைய ஷுஹூதுடைய நிலையில், ஒரு வேற்று மதத்தைச் சேர்ந்த ஒரு துறவியின் பூணூலை அறுத்துவிட்டு என் இறைவன் அவரை குத்புஸ்ஸமான் ஆக்கியதைக் கண்டேன். என்னிடமுள்ள விலாயத்தைப் பறிக்காததற்காக அவ்விரவு முழுவதும் ஸஜ்தாவில் என் இறைவனுக்கு நன்றி செலுத்தினேன் ". இதுதான் இறைவனின் இராஜாங்கம். யாரும் கேள்வி கேட்க முடியாது.

لَا يُسْـَٔلُ عَمَّا يَفْعَلُ وَهُمْ يُسْـَٔلُوْنَ (அல் அன்பியா-23)

இறைவனின் செயல்களைப் பற்றி அவனிடம் கேட்கப்படமாட்டாது. அவர்கள்தான் (மனிதர்கள்தான்) கேட்கப்படுவார்கள்.

இந்த இறையாளுமை இறைவனின் மொழியான திருக்குர்ஆனைவிட வேறு எவ்விடத்திலும் இத்தனை அதீதமாகக் காணப்படவில்லை.

எந்த சமயம் வஹீ இறங்கும்? யாருக்கும் தெரியாது. அலக் என்ற அத்தியாயத்தில் துவங்கும் ஓதுவீராக என்ற திருவசனம்தான் முதலாவதாக இறங்கிய திருவசனம் என்பது பெரும்பான்மையான அறிஞர்களின் அபிப்பிராயம். இதிலும் அபிப்பிராய பேதம் உள்ளது. கைர். இதனை அடுத்து இறங்கிய வஹீயான முத்தத்திர் அத்தியாயத்திற்கும் இதற்கும் இடையில் உள்ள இடைவெளியின் பெருந்துன்பத்தைப் பெருமானார்ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சுமக்க வேண்டியதாயிற்று.

மக்கத்து வன்காபிர்களின் தொல்லைகள் நாளுக்கு நாள் அதிகமாகிய பொழுது பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய திருக்காட்சியில் பசுஞ்சோலைகள் காட்டப்பட்டன. அவர்களுடனிருந்த விசுவாசிகள் ஹிஜ்ரத் சமீபித்துவிட்டது என உணர்ந்துகொண்டார்கள். வன்கொடுமை அனுபவித்துக் கொண்டிருந்த விசுவாசிகள் அந்த நாளுக்காக ஏங்கிக் கொண்டிருந்தார்கள். அந்நாள் அவ்வளவு சீக்கிரம் வந்து விடவில்லை. வெகு காலம் கழித்து "(நபியே) கூறுவீராக, நான் அனுப்பப்பட்ட தூதர்களின் ஆரம்பமில்லை. மேலும், எனக்கும் உங்களுக்கும் என்ன நடக்கும் என்பது எனக்குத் தெரியாது. நான் என்மீதிறங்கும் வஹீயை மட்டும் பின்பற்றிகிறேன். நான் தெளிவான அச்சமூட்டி எச்சரிப்பவரேயன்றி வேறில்லை" (அல்அஹ்காப் 9). என்ற திருமறைத் திருவசனம் நபி பெருமான் மீது இறங்கியது.

# விடுதலை

குரு என்பவர் உங்களை உற்சாகப்படுத்த வரவில்லை. உங்களுக்கு ஆறுதல் சொல்வதும் உங்களை தைரியப்படுத்துவதும் ஊக்குவிப்பதுவும் அல்ல அவர் பணி. நீங்கள் அமைத்துவைத்திருக்கும் சில எல்லைகளைத் தகர்த்து எறிவதுதான் அவர் நோக்கம்.

நீங்கள் சிக்கியிருக்கும் பலவற்றில் இருந்தும் உங்களை விடுவித்து சுதந்திரம் தருவதே அவர் விழைவு. கட்டுண்டு பாதுகாப்பாக இருப்பதைவிட சுதந்திரமாக ஆபத்துகளை எதிர்கொள்வதே உயர்ந்தது.

ஓர் எறும்பு போகும் பாதையில் விரலை வைத்து மறித்துப் பாருங்கள். அது நின்றுவிடாது. விரல்மீது ஏறிப் போகலாமா? அல்லது விரலைச் சுற்றிக் கொண்டு போகலாமா? என முயற்சி செய்யும். எல்லைக்குள் கட்டுப்பட்டிருப்பது எறும்புக்குக்கூடப் பிடிப்பதில்லை. எந்த உயிராக இருந்தாலும் விடுதலை பெறுவதுதான் அதன் அடிப்படை தாகம்.

எதனுடனும் பிணைத்துக் கொண்டு திருப்தியுற உயிரால் முடிவதில்லை என்பதால்தான் எது கிடைத்தாலும் அது வேறு ஒன்றைத் தேடிக்கொண்டே இருக்கிறது. இதுவே முக்திக்கு விழையும் தன்மை. இதை விழிப்பு உணர்வோடு அணுகச் செய்வதே குருவின் வேலை.

*படித்தேன் பிடித்தது. -கிளியனூர் இஸ்மத்-*

# 12 திருமறைக் கவிதைகள்!

தமிழில் நாகூர் ரூமி

## சூரா ஆல இம்ரான்

அல்லாஹ்வின் உதவி இருக்குமானால்
உங்களை வெல்பவர்
உலகில் இல்லை.

(ஸூரா ஆல இம்ரான், வசனங்கள் (160)

படைத்தவனின் பாதையில்
போரிட்டு உயிர் துறந்தவர்களை
இறந்தவர்கள் என்று எண்ணாதீர்
உயர்ந்தவனோடு அவர்கள்
உயிருடன்தான் உள்ளார்கள்
உணவளிக்கப்பட்டவர்களாக.

(ஸூரா ஆல இம்ரான், வசனங்கள் (169)

இறை நம்பிக்கையை விற்று
இறை மறுப்பை வாங்கிக் கொண்டவர்கள்
தூயோனுக்குத் தீங்கு செய்ய முடியாது
அவர்களுக்கு வாட்டி வதைக்கும்
வேதனையுண்டு.

(ஸூரா ஆல இம்ரான், வசனங்கள் (177)

ஒவ்வோர் ஆன்மாவும்
சுவைக்கத்தான் வேண்டும் இறப்பை
இறுதித் தீர்ப்பு நாளில் பெறுவார்கள்
செயல்களுக்கான பிரதிபலனின் சிறப்பை

(ஸூரா ஆல இம்ரான், வசனங்கள் (185)

விண்ணும் மண்ணும்
வல்லவனுக்கே உரியது
அனைத்தின் மீதும்
ஆற்றலுள்ளவன் அவனே.

(ஸூரா ஆல இம்ரான், வசனங்கள் (189)

# சர்தார் அப்துல் கரீம் ஹள்ரத் (ரஹ்)

கலீபா. எம். சிராஜுத்தீன் ஹக்கியுல் காதிரிய். திருச்சி

**ந**யவஞ்சகத்தால் எழுதப்பட்ட அந்த மடலைக் கண்டதும் பக்கீர் முஹம்மது ராவுத்தர் அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்திற்கு அளவில்லை. கண்களில் கனல் பறந்தது. விறுவிறுவென்று நேரே மதரஸாவிற்கு வந்தார். ஹள்ரத் அவர்களிடம் அந்த மடலைக்காட்டி "இம்மடலை எழுதிய ஐந்து பேரையும் உடனே நம் மதரஸாவிலிருந்து துரத்திவிடுங்கள்" என்று கடுங்கோபத்துடன் கூறினார்.

அமைதியே உருவான ஹள்ரத் அவர்கள் இராவுத்தரை அமைதிப்படுத்தி அமரவைத்தார்கள். "நீங்கள் இம்மதரஸாவைக்கட்டியதே அறிவற்றவர்களைத் திருத்துவதற்காக அல்லவா? என்று நிதானமாக எடுத்துக் கூறினார்கள். அறியாதவர்களால் எழுதப்பட்ட அக்கடிதத்தைக் கிழித்தெறியுங்கள்" என்று கூறினார்கள்.

பக்கீர் முஹம்மது ராவுத்தரும் வாய் பேசாமல் எழுந்து போய்விட்டார்.

ஹக்கின் அருளால் ஹள்ரத் அவர்களுக்கு உள்ளுணர்வால் பல செய்தி அறிய முடிந்தது. யாராவது ஒருவர் வந்து ஒரு விஷயத்தைச் சொல்லி விளக்கம் கேட்க வந்தால் அவர்கள் பேச வாய் திறக்குமுன் அவர்கள் கேட்க வந்த செய்திக்கு விளக்கம் கூறிவிடுவார்கள்.

ஹள்ரத் அவர்கள் ஆடு ஒன்று வளர்த்துவந்தார்கள். அதற்கு தினமும் இலை தழைகளைப் பறித்துப்போட ஒரு சிறுவனை வேலைக்கு வைத்திருந்தார்கள். அந்தச்சிறுவன் ஒரு மரத்தின் மீதேறி அமர்ந்து கொண்டு ஆட்டுக்கு வேண்டிய இலைகளைப் பறித்துப் போட்டுவிட்டு எண்ணினான். நாம் இங்கிருந்து கீழே குதித்தால் ஹள்ரத் அவர்கள் அதை அறிந்து ஓடி வந்து நம்மைக் காப்பாற்றுவார்களா என்று பார்க்கலாம் என்று. திடீரென்று தன் எண்ணத்தை மாற்றிக் கொண்டு மரத்திலிருந்து கீழே இறங்கி வீட்டுக்கு வந்துவிட்டான். ஹள்ரத் அவர்கள் அந்தச் சிறுவனைக் கூப்பிட்டு தம்பி! நீ நாளைமுதல் வேலைக்கு வரவேண்டாம் என்று கூறிவிட்டார்கள். அந்தச் சிறுவனுக்கு பகீரென்றது.

“நீ வேலைக்கு வரவும் வேண்டாம்; மரத்திலிருந்து தொப்பென்று விழவும் வேண்டாம். நான் ஓடி வந்து உன்னைக் காப்பாற்றவும் வேண்டாம்” என்று சொல்வதுபோல் இருந்தது அவனுக்கு.

ஒரு நாள் இரவில் மத்ரஸாவில் சிலருடன் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்த போது திடீரென ஹள்ரத் அவர்கள் சிறிது நேரம் உணர்வற்ற நிலைக்குப் போய்விட்டார்கள். கூட இருந்தவர்கள் பயந்துபோய்விட்டார்கள். ஹள்ரத் அவர்கள் பட் என சுதாரித்துக் கொண்டு ராணிப் பேட்டையில் என் குழந்தை இறந்துவிட்டதாக தகவல் கிடைத்தது என்றார்கள். உடனிருந்தவர்களுக்கு ஒரே வியப்பு! அதில் ஒருவர் ஹள்ரத் அவர்களிடம் எங்கே தந்தியைக் காட்டுங்கள் என்று கேட்டே விட்டார். ஹள்ரத் அவர்கள் இப்படி தமக்கு ஓர் உள்ளுணர்வுதான் ஏற்பட்டதாகவும் உண்மையில் அவர்கள் கொடுத்த தந்திக் காகிதம் நாளை காலை 8 மணிக்கு நம் மதரஸாவிற்கு வந்துவிடும் என்றார்கள். அதுபோல அடுத்த நாள் காலை 8 மணிக்கு ஹள்ரத் அவர்கள் குழந்தை இறந்துவிட்டதாகதந்தி வந்தது.

பொதக்குடியிலிருந்துகொண்டே கூத்தாநல்லூரில் உள்ள இன்னவர், வாந்தி பேதியால் இறந்துவிட்டார் என்றார்கள். சற்று நேரத்தில் கூத்தாநல்லூரிலிருந்து தந்தி வந்துவிட்டது.

ஹள்ரத் அவர்கள் பொதக்குடியிலிருந்து நெல்லிக்குப்பம் வந்திருந்தார்கள். திடீரென “இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்” என்று கூறி எழுந்தார்கள். என்னவென்று அருகிலிருந்தவர்கள் கேட்க, பொதக்குடியில் மதரஸா நிறுவனரின் தாயார் இறந்துவிட்டார்கள் என்று கூறி அங்கிருந்து உடனே புறப்பட்டுவிட்டார்கள். பொதக்குடிக்கு அவர்களின் ஜனாஸா தொழுகைக்கு வந்துவிட்டார்கள். இப்படி அநேக விடயங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

சிலர் கேட்கலாம், இறைநேசர்கள் எல்லோரும் இப்படி நடந்து கொள்வதில்லை என்று. இறைநேசச் செல்வர்கள் சிலருக்கு இப்படி மறைக்க முடியாமல் வெளிப்பட்டுவிடுவது உண்டு. பெரும்பாலோர் இவ்வாறு எதையும் வெளியில் காட்டிக் கொள்வதில்லை. நமது கண்ணியத்திற்குரிய ஜமாலிய்யா செய்யிது யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹாஷிமிய்யி (ரலி) அவர்கள் எழுதியிருக் கிறார்கள். “நாம் கராமத்துகளைக் காட்ட மிகவும் வெட்கப்படுகிறோம். எப்படி ஒரு பெண், தான் ஹைழான விடயத்தில் பிறர் அறிய வெட்கப்படுவாளோ அதுபோல நாமும் வெட்கப்படுகிறோம்” என்று. இன்னும் சிலர் பிறர் கேட்டால் சொல்வார்கள் இல்லையென்றால் பேசாமல் இருந்துவிடுவார்கள். இதனால் இறைநேசச் செல்வர்கள் இப்படித்தான் இருப்பார்கள் என்று மட்டுப் படுத்தவே முடியாது.

அது அவர்களின் விருப்பம். மற்றும் இறைவனின் நாட்டம். அதனால் ஒருவரின் உயர்நிலையை இதை மட்டும் வைத்தது எடைபோட முடியாது. அப்படி எடைபோடும் அளவுக்கு நாமும் இல்லை என்பதுதான் நிதர்சனமான உண்மை.

ஹள்ரத் அவர்களிடம் மார்க்க சம்மந்தமான விஷயங்கள் பற்றி "மஸ்அலா" ஏதும் கேட்டால் ஹள்ரத் அவர்கள் உடனே பதில் சொல்லிவிடுவார்கள். இல்லையென்றால் சிறிது நேரம் கண்களை மூடிவிட்டுப் பின் "இந்த கிதாபு இன்ன பக்கத்தில் இன்ன வரியைப் பார்க்கவும்" என்று கூறிவிடுவார்கள். ஹள்ரத் அவர்களைக் காண பல புனித ஆத்மாக்கள் வந்து போவது வழக்கமாக இருந்தது.

கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கந்தூரியை ஹள்ரத் அவர்கள் மிகவும் சிறப்பான முறையில் அவர்கள் மதரஸாவில் வருடா வருடம் நடத்துவார்கள். ஊரே திரண்டு நிற்கும்.

அதுபோல ஒருதடவை கந்தூரி சிறப்பாக நடந்துகொண்டிருந்தது. ஊரே வாசனையில் கமழ்ந்துகொண்டிருந்தது. சோறு கறி ஒருபுறம் தடபுடலாக தயாராகிக் கொண்டிருந்தது. அப்படிப்பட்ட மங்களகரமான வேளையில் ஏதோ வெளிநாட்டினர் போன்ற தோற்றமுடையவர்களில் இருவர் வந்து சபையில் அமர்ந்தனர். சிறிது நேரத்தில் அதில் ஒருவர் திடீரென மயக்கமுற்றார். அருகிலிருந்தவர் அவரை ஆசுவாசப்படுத்த எழுந்தார். உடனே உடன் வந்தவர் அவரைத் தடுத்துப் பேசாமல் இருக்குமாறு கேட்டுக் கொண்டார். சிறிது நேரத்தில் மயக்கமுற்றவர் எழுந்துவிட்டார். அது ஒரு ஹால் (நிலை).

கந்தூரி வைபவம் சிறப்பாக முடிந்தது. இந்த இருவர் எழுந்து ஹள்ரத் அவர்களின் அறைக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டனர். மற்றவர்கள் திகைத்து வெளியே நின்றுவிட்டார்கள். நேரம் அதிகமானது, வெளியே நிற்பவர்கள் பொறுக்க முடியாது அறைக்கதவைத் தள்ளித் திறந்து உள்ளே சென்றனர். உள்ளே சென்ற அந்த மனிதப் புனிதர்களைக் காணோம். ஹள்ரத் அவர்கள் மட்டும் மட்டற்ற மகிழ்ச்சியோடு அமர்ந்திருந்தார்கள். அறைக்குள் வந்தவர்கள் "ஸர்தார்" அவர்களே உள்ளே உங்களைக் காண வந்தவர்கள் யார்? அவர்கள் எங்கே என்று கேட்டார்கள். ஹள்ரத் அவர்கள், வந்தவர்கள் "அப்தால்கள்" என்னும் பெரியோர். இந்தப் புனித மஜ்லிஸில் கலந்து கொள்ள வந்தார்கள். மிகுந்த மகிழ்ச்சியுடன் சென்றுவிட்டார்கள். சரி, இது போதும் உங்களுக்கு என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டார்கள். *(வரும்)*

# அல்லாஹ்வும் நீயும்..

ஹள்ரத் அலீ (ரலி) அவர்களிடம் ஒருவர் வந்து, அமீருல் முஃமினீனே! அல்லாஹ்வைக் கொண்டு (அல்லாஹ்வைப் பற்றி) எனக்கு அறிவுரை பகருங்கள் என்றார். அதற்கு கலீபா ஹள்ரத் அலீ (ரலி) அவர்கள்,

அஃது ஓர் ஆழிய கடல்; அதில் முங்காதிரு என்றார்கள்.

மீண்டும் அதே நபர் அதே கேள்வியைக் கேட்டார். அப்போது கலீபா ஹள்ரத் அலீ (ரலி) அவர்கள், அஃது ஓர் இருளான வீடு; அதில் உட்புகாமல் இரு என்றார்கள்.

மூன்றாவது முறையும் அதே மனிதர் அதே கேள்வியைக் கேட்டார்! அதற்கு கலீபா ஹள்ரத் அலீ (ரலி) அவர்கள், அஃது ஓர் அற்புத இரகசியம்; அதனைக் (கொண்டு) கண்டாதிரு என்றார்கள்.

நான்காவது முறையும் அதே நபர் அதே கேள்வியைக் கேட்டார்! அதற்கு ஹள்ரத் அலீ (ரலி) அவர்கள், அதனைக் குறித்து (அல்லாஹ்வைக் குறித்து) நான் உடைத்துக் கூறுவேனேயாகில் (சர்வமும்) அடங்கிவிடும் என்றார்கள்.

பின்பு அங்கு மனிதர் ஒருவர் இருக்கிறார்! அவர் தனக்கு அனைத்து விஷயங்களிலும் தான் ஆற்றல் பெற்றுக் கொண்டு இருப்பதாகக் கூறுகிறார் என்று கூறப்பட்டது. இதனைக் கேட்டு ஆத்திரமடைந்த கலீபா ஹள்ரத் அலீ (ரலி) அவர்கள், யார் அவர்? என்றார்கள். அதே சபையிலிருந்த மனிதரைச் சுட்டிக் காட்டப்பட்டது. அவரை அருகில் அழைத்துத் தங்கள் உறையிலிருந்து வாளை உருவி, அம்மனிதரின் கழுத்தில் வைத்து உனக்கு எல்லா தராணிகளும் (சக்திகளும்) இருக்கின்றனவா? அப்படியிருந்தால்...எனது வாளிலிருந்து உன்னைக் காப்பாற்றிக் கொள்.. பார்க்கலாம் என்றார்கள். அம்மனிதரால் பதில் கூற முடியாமற் போயிற்று. பின்னர் தாம் கூறிவந்த அகம்பாவச் சொற்களுக்கு மன்னிப்புக் கேட்டார். அதன் பின்னர் கலீபா ஹள்ரத் அலீ (ரலி) அவர்களிடம், தனக்கு நஸீஹத்து (அறவுரை) பகருமாறு வேண்டினார்.

கலீபா ஹள்ரத் அலீ (ரலி) அவர்கள் கூறினார்கள்: என்னிடமுள்ள சிறிய பெரிய சக்திகள் யாவும் அல்லாஹ்வின் நாட்டத்தினால் எனக்குக் கிடைத்துள்ளன என்பதாக எப்போதும் மனதில் நினைத்துக் கொள்; அதனையே உன் கவனத்தில் வைத்துக் கொள்; அல்லாஹ்வின் பிரமாண்ட சக்தியில் நான் ஒரு சிறு பிண்டமே என்பதில் பிடிவாதமாக நம்பிக்கை கொள்!

# அப்ஜத் கணக்கு... தெரியுமா?

அப்ஜத் கணக்கின் வரலாறு.

குர்ஆன்– மக்தப் மதுரஸாக்களில் ஓதிக் கொடுக்கப்படும் காயிதா பக்தாதிய்யா, யஸ்ஸர்னல் குர்ஆனின் கடைசிப்பக்கங்களில் அப்ஜத், ஹவ்வஸ், ஹுத்தி, கலமன், ஷங்பஸ், கரஷத். என ஒரு பாடம் இருக்கும். அதற்குக்கீழே அறபு எண்கள் இருக்கும். அதன் விபரம் என்ன தெரியுமா? இது ஆங்கில நியூமராலஜியைப் போல அறபு நியூமராலஜி எனக் கொள்ளலாம். நாம் எழுதும் 786 என்பதே இதிலிருந்து வந்ததுதான். அதாவது, பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ரஹீம் எனும் அறபு எழுத்துக்கான எண்கள்தான் 786. குர்ஆன் ஷரீபின் புனித எழுத்துகளை மரியாதையின்றி பயன்படுத்தக் கூடாது என்பதற்காக இந்தக் குறியீடு முஸ்லிம்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அறபுக் கவிதைகளில் பிறந்த ஆண்டைக் குறிப்பிடுதற்காகவும், மற்ற ரகசியச் செய்திகளைக் குறிப்பிடுவதற் காகவும் இது பயன்படுகிறது.

அப்ஜத் கணக்கைக் கண்டுபிடித்தவர் யார்? அது எந்தக் காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டது?

அப்ஜத், ஹவ்வஸ், ஹுத்தி, கலமன், ஷங்பஸ், கரஷத். இந்த ஆறுபேரும் அரசர்கள். இவர்கள்தான் முதன் முதலில் அறபு நூற்களின் மூல கர்த்தாக்கள். அமைப்பாளர்கள். அதனால் இக்கணக்கு அவர்கள் பெயராலேயே வழங்கப்படுகிறது.

இமாம் மஸ்ஊத் என்பவர் தமது தாரீக் எனும் நூலில் கூறுகிறார்:

அப்ஜத் என்பவர் ஹிஜாஸிலுள்ள ஒரு அரசர். ஹவ்வஸும் ஹுத்தியும் தாயிஃப் பகுதியிலுள்ள இரு அரசர்கள். கலமன், ஸங்பஸ், கரஷத் என்போர் மிஸ்ர் நாட்டு மன்னர்கள். இவர்கள் அனைவரும் அல் ஆரிபா அரபுகளில் முரமிர் இப்னு சமர்வா என்பவரின் குடும்பத்தினராகும். அவர்களின் பிள்ளைகள் ஒவ்வொருவரும் அப்ஜத் என்ற பெயரையே வைக்கப்பட்டனர். இதனை இமாம் ஸுயூத்தீ (ரஹ்) அவர்கள் தங்களது அஜாயிபுல் லஙத் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்கள். இவற்றின் பொருள் குறித்து கருத்து வேறுபாடுகள் உண்டு.

ஹழ்ரத் இப்னு அப்பாஸ் (ரலி) சொல்கிறார்கள்: அபாஜத் என்றால் மறதியின் காரணமாக தந்தை ஆதம் (அலை) அவர்கள் வில க்கலைப் புறக்கணித்து மரத்தின் கனியை உண்ண / ஜத்த– முயன்றார்கள் என்பதாகும்.

**ஹவ்வஸ் :** (விலக்கப்பட்ட கனியை உண்டதால்) விண்ணிலிருந்து மண்ணுக்கு இறக்கப்பட்டார்கள்.

**ஹுத்தீ :** தெளபாவால் குற்றம் நீக்கப் (மன்னிக்கப்) பட்டது.

**கலமன்:** மரத்திலிருந்து கனியைப் புசித்தார்கள். நாயன் அவர்களுக்கு தெளபாவைக் கொண்டு அருள்புரிந்தான்.

**ஸஙபஸ்:** சுவனத்திலிருந்து இறைவன் அவர்களை வெளியேற்றினான்.

**கரஷத் :** குற்றத்திலிருந்தார்கள், தண்டனையிலிருந்து ஈடேற்றம் பெற்றார்கள்.

நீங்கள் அப்ஜத் எண்ணின் பொருளைை எடுங்கள்; அதில் அநேக வியத்தகு விஷயங்கள் உள்ளன. என்பது நபிமொழி.

**அலிஃப் :** அல்லாஹ்வின் அத்தாட்சி.

**பாஉ:** பஹ்ஜதுல்லாஹ்/ இறைவனின் பேரழகு.

**ஜீம் :** மஜ்துல்லாஹ்/ அல்லாஹ்வின் தூய்மை

**ஹா :** ஹாவிய்யா / கொடிய நரகம்.

**வாவு :** வைல்/ நரக ஓடை

**ஸாவு:** ஸாவிய்யா பின் னார். நரகத்தின் ஒரு மூலை.

**இவ்வாறு தஃப்ஸீரூத் தத்கீர் எனும் நூல் கூறுகிறது.**

---

## சோதிக்காதே!

ஒரு முறை இப்லீஸ், நபி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் வந்து மர்யமின் மகனே! அல்லாஹ் உமக்கு விதித்ததைத் தவிர வேறு எதுவும் நடக்காது என்றான்.

அதற்கு ஈஸா நபியவர்கள் ஆம், அல்லாஹ்வின் விரோதியே! உண்மைதான் என்றார்கள்.

அப்போது இப்லீஸ், அப்படியென்றால் நீங்கள் இந்த மலை உச்சி மீது ஏறி, கீழே குதித்துப் பாருங்கள் ! இறப்பீர்களா, இல்லையா? பார்ப்போம் என்றான்.

அதற்கு ஈஸா நபியவர்கள், அல்லாஹ்வின் எதிரியே! அல்லாஹ் தனது அடியானை சோதித்துப் பார்ப்பான். ஆனால் அடியான் அல்லாஹ்வை சோதித்துப் பார்க்கக் கூடாது என்று பதில் அளித்தார்கள். *(நூல்: இமாம் அஹ்மத் (ரஹ்) அவர்களின் பற்றற்ற வாழ்வு)*

# சுதந்திர தினம் - குடியரசு தினம் - கொடியேற்றல்!

சுதந்திர தினத்திற்கும் குடியரசு தினத்திற்கும் கொடியேற்றுவதில் உள்ள வித்தியாசம் அறிவோம்!

**வித்தியாசம் 1.**

சுதந்திரதினம் : கொடிக்கயிற்றை கீழிருந்து மேல் நோக்கி இழுத்து, பிறகு கட்டப்பட்டுள்ள கொடி திறக்கப்பட்டு பறக்கவிடப்படும். அன்றைய தினத்திற்கு மரியாதை செய்யும் விதமாகவே கொடி இவ்வாறு ஏற்றப்படுகிறது. இந்த நிகழ்வானது கொடியேற்றம் ( flag hosting ) என அழைக்கப்படுகிறது.

குடியரசு தினம்:கொடியானது முன்னரே கம்பத்தின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும். பின்னர் முடிச்சு அவிழ்க்கப்பட்டு கொடி பறக்கவிடப்படும். இதனை கொடியைப் பறக்க விடுதல் (flag unfuring)

**வித்தியாசம் 2.**

**சுதந்திர தினம்:** சுதந்திரம் கிடைத்தபோது அரசியல் சட்டம் அமுலுக்கு வரவில்லை. அதனால் அப்போது பிரதமர்தான் நாட்டில் முதல் மனிதராக (flagunfuring) கருதப்பட்டார். குடியரசுத் தலைவர் அப்போது பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளவில்லை. இதனால் சுதந்திர தினத்தன்று பிரதமரே தேசியக் கொடி ஏற்றுகிறார். குடியரசுத்தலைவர் மாலையில் ரேடியோ தொலைக்காட்சியி லும் உரையாற்றுவார்.

**குடியரசு தினம்:** குடியரசு தினத்தன்று அரசியல், சட்டம் அமலுக்கு வந்துவிட்டதால், அரசியல் சட்டத்தின் தலைவர் மற்றும் பாதுகாவலர் என்ற முறையில் குடியரசுத் தலைவரே தேசியக் கொடியைப் பறக்கவிடுவார்.

**வித்தியாசம் 3.**

சுதந்திர தினம்: தேசியக் கொடியானது பிரதமரால் டெல்லி செங்கோட்டையில் ஏற்றப்படும்.

குடியரசு தினம்: குடியரசுத்தலைவரால் டெல்லி ராஜ்பாத்தில் பறக்கவிடப்படும். இவைகளேஇருவேறு தினங்களில் கொடியேற்றுவதில் உள்ள வித்தியாசங்கள்.

# அற்புதம்!

கலீபா. சக்கரை முஹம்மது.பி.இ. கல்பாக்கம்

நபி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்குப் பின் ஒலிமார்கள்தான் அதிகப்படியான எண்ணிக்கையில் மக்களை நேர்வழியில் கொண்டு வந்துள்ளார்கள் என்பதை சரித்திரத்தின் வாயிலாக உணர முடிகிறது. ஒலிமார்கள் வாழ்ந்த பொழுதும் மறைந்த பின்பும் மக்களை நேர்வழிக்கு கொண்டு வருகிறார்கள் என்பதை நான் அறியாத பருவம் அது, என் பெற்றோர்கள் மற்றும் என் மாமன்மார்கள் அனைவரும் இறை நம்பிக்கையுடன் தொழுதுவந்ததைக்கண்ட நான் அவர்களிடையே கண்ட மூட நம்பிக்கை கண்டு சிறிது சிறிதாகத் தடம் புரண்டேன். பசுங்கதிர் என்ற பத்திரிக்கை ஆசிரியர் எம்.கே.ஈ. மௌலானா என்பவரால் வெளிடப்பட்டு வந்தது. அப்பொழுது பாமர இசுலாமியர்கள் முதல் ஆலிம் பெருமக்கள் வரை சிராத்துல் முஸ்தகீம் என்ற பாலம் ஒன்று இருப்பதாகவும் அதில் நாம் அனைவரையும் நடக்க வைத்து சுவர்க்க வாசிகளையும் நரகவாசிகளையும் அல்லாஹ் பிரித்தெடுப்பான் என்பது போன்ற பாமர நம்பிக்கையை மக்களிடையே பேசி வந்ததால் பசுங்கதிர் என்ற இஸ்லாமிய பத்திரிக்கையில் (விஞ்ஞானத்தின் இறைவன் என்று தலைப்பு கொடுத்து) இவர்கள் நினைப்பது போல் இறைவன் என்று ஒருவன் இல்லை, இல்லை இல்லவே இல்லை என்று தொடர்ந்து எழுதிவந்தேன்.

மணிவிளக்கின் ஆசிரியர் மர்ஹூம் சிராஜுல் மில்லத் ஏ.கே .அப்துல் சமது அவர்கள் மணிவிளக்கில் என் கட்டுரையை வெளியிட சம்மதம் தெரிவித்தார்கள். பல ஆண்டுகள் எழுதினேன். வேலைப்பளு காரணமாக தொடர முடியாமல் போயிற்று.

நான் கிராம்டன் இஞ்சினியரிங் கம்பெனியில் பணியாற்றிக் கொண்டு இருந்த சமயம். 10.12.1967ல் திண்டுக்கல்லிருந்து என் மனைவியார் என் முதல் மகனார் உடல் நிலையைப் பற்றி எழுதிய கடிதம் கிடைத்தது. என் முதல் மகன் இரண்டு வயது. நல்ல நிலையில் இருந்தவன், நிற்கும் பொழுது திடீரென்று பல முறை கீழே விழுகிறான் என்ற செய்தியைத் தாங்கிய கடிதம் வந்தது. அந்தச் செய்தி என்னை மிகவும் பாதித்து. அக்காலத் தொலை தொடர்பு வசதிகள் முன்னேற்றம் தற்போது போல் இல்லாமல் இருந்தது. பெரிய கம்பெனிகளில் மட்டும் அக்காலத்தில் தொலைபேசிகள் இருந்தன. எனவே என் மகனாரை திண்டுக்கல்லில் அனுபவம்

வாய்ந்த மருத்துவர் திருமதி ஞானய்யா எல்.எம்.பி அவர்களிடம் காட்ட தபால் மூலமாக அறிவுரை கூறினேன்.

சில தினங்களில் பையன் நலமடைந்து விட்டதாகவும் பதில் கிடைத்தது. உடன் நாகூர் வருவதாக நேர்த்திக்கடன் செய்து இருப்பதாகவும் என் மனைவி கூறினார். அவ்வாறு செய்வதில் எல்லாம் நம்பிக்கை பெறாது இருந்த நான், என் துணைவியார் நாகூர் போக அனுமதிக்கவில்லை. ஏன் போகக் கூடாது என்று என்னிடம் காரணம் கேட்கும்பொழுதெல்லாம் நீர் மருத்துவரிடம் செல்லாமல் நல்லபடியானால் நாகூர் வருகிறேன் என்று மட்டும் எண்ணி நலமாக இருந்தால் நாம் போகலாம். ஆனால் மருத்துவர் திருமதி ஞானய்யா விடம் சென்றதால்தான் நலமாயிருக்கிறது என்று காரணம் கூறுவேன். இப்படியே எனக்கும் என் துணைவியாருக்கும் உரையாடல் தொடர்ந்து கொண்டே இருந்தது. இவ்வாறே எங்கள் வாழ்க்கையில் இறை நம்பிக்கையைப் பேசும் பொழுதெல்லாம் ஆலிம்களே அறியாமையில் இருந்தால் மக்களுக்கு வழி காட்டுவது யார்? என்று கேள்வி எழுப்பி பத்திரிக்கையில் எழுதிக் கொண்டிருந்தேன். என் மனைவி நாகூர் செல்வது பற்றி இடையிடையே வற்புறுத்திக் கொண்டு இருந்தார். நாகூர் சென்று வர ஆகும் செலவை எளியவர்களுக்குக் கொடுப்பதைத்தான் அல்லாஹ் விரும்புவான் என்று அறிவுரை கூறினேன்.

அணுசக்தி இலாகாவில் சேர்ந்து கல்பாக்கத்தில் வாழ்ந்துவரும் சமயம் இரண்டு நாட்கள் விடுமுறை இருந்ததால் மும்மதத்தினரும் சென்றுவர சிதம்பரம் திருநள்ளாறு, நாகூர் வேளாங்கண்ணி வழியாக ஆன்மிகச் சுற்றுப்பிரயாணம் சென்றுவர அணுசக்தி இலாகா ஐந்து பஸ்கள் ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு இருந்ததைக் கண்ட என் மனைவி மிகவும் வற்புறுத்தினார். கல்பாக்கம் முதல் வேளாங்கண்ணி சென்று வர எரிபொருள் செலவு மட்டும் நபர் ஒன்றுக்கு ரூபாய் பதினொன்று மட்டும் செலுத்தினால் போதும் என்ற சலுகை இருந்ததால் என் மனைவியின் விருப்பத்தை நிறைவேற்றிவிடலாம் என்ற முடிவுக்கு வந்தேன். காலை 7 மணிக்கு துவங்கிய பயணம் தொடங்கி மாற்று மத சகோதரர்கள் அங்கங்கு கோவில் தரிசனம் செய்து நாகூர் வர மாலை ஐந்து மணி ஆயிற்று. என் மனைவி மற்றும் என் இருமகன்களுடன் தர்கா சென்றோம்.

ஞானப்பேரொளி, நாகூர் வள்ளல் பாதுஷா நாயகம் அவர்களின் ரௌளா சரீபில் வாசல் முன் நின்றோம். வாசலின் வெளியில் வலது பக்கம் ஒருவரும் இடது பக்கம் ஒருவரும் சாம்பிராணி புகைக் கலயத்துடன் தாயத்துகள் பலவற்றை விரவி வைத்து, வரும் பக்தர்களை கவர்ந்து கொண்டு உள்ளே சென்று வர ஐந்து ரூபாயும், வெளியில் உட்கார்ந்து அவர்கள் துஆ ஓத வந்தவர் ஆமீன் சொல்லிவிட்டு வந்த

வழியே செல்ல இரண்டரை ரூபாயும் கொடுக்கும்படி கேட்டார்கள். என் குடும்பத்தினரையும் அழைத்துக்கொண்டு வாசலின் வெளியே கிழக்குப்புறமாகச் சென்று என் இரண்டு கைகளையும் சேர்த்து என்ன துவா செய்தேன் தெரியுமா? இனிமேல் நான் இங்கு வரவே மாட்டேன். நாங்கள் கல்பாக்கத்தில் இருந்து இங்கு வர செலவிடும் எரிபொருள் செலவை எங்கள் அருகில் வாழும் ஏழைகளுக்காக செலவிடுவதைதான் தாங்கள் விரும்புவீர்கள். எனவே கல்பாக்கம் திரும்புகிறோம் என்று கூறிவிட்டு ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் நம்மவர்களின் ஒரு ஏழை குடும்பத்திற்கு உணவு அளிக்க முடிவு செய்து அவ்வாறே செய்தேன். நாகூரில் நான் செய்த துவாவை பொறுத்துக் கொள்ளாமல் தன் கைகைளக் கொண்டு என் வாயை அவ்வாறு சொல்லாதீர்கள் என்று மூடினார் என் மனைவி. அவ்வாறு என் மனைவி என் வாயை மூடிய பொழுது நான் என் மனைவியிடம் என்ன சொன்னேன் தெரியுமா? இங்கு அடங்கியுள்ள, நாம் நம்பி வந்த மகான் நம்மைத் தண்டித்துவிடுவார் என்று எண்ணவேண்டாம். சில வேலைகளில் பாடம் வேண்டுமானால் கற்பிக்கலாம் என்று என் அபிப்ராயத்தைக கூறிவிட்டு நான் எண்ணியது போல் வாரம் ஒரு ஏழைக் குடும்பத்துக்கு உணவளித்து விடலாம் என்று முடிவு செய்து விட்டு திரும்பினோம். என் துணைவியார் கல்பாக்கம் நகரில் உள்ள எங்கள் வீட்டை அடைந்தவுடன் சொன்ன வார்த்தை நாகூர் வந்து இப்படி சொல்லிவிட்டீர்களே என்பதுதான்.

சில வாரங்களில் என் மகனாருக்கு நகச்சுற்றி என மக்கள் பேசிக் கொள்கிறார்கள் அல்லவா? அது அவனுடைய வலது கை ஆள்காட்டி விரலில் ஒன்றில் வந்தது. ஒவ்வாரு நாளாக கல்பாக்கம் அணுசக்தி நகர் மருத்துவ மனையில் சென்று விரலில் மருந்திட்டு, கட்டுப்போட்டு வருவது வழக்கம். மருத்துவர் அவர் கொடுக்கும் மருந்துச் சீட்டில் விரல் கட்டைப் பிரித்து புதிய கட்டுப் போடுங்கள் ரிப்பீட் எழுதுவது வழக்கம். அதாவது பாதிக்கப்பட்ட விரலை சுத்தம் செய்து விட்டு அதே மருந்தை வைத்துக் கட்டுப்போடுவது வழக்காமாயிற்று. இப்படி வழக்கமாக கட்டுப்போடும் போது ஒருநாள் கட்டை அவிழ்ந்து விரலை சுத்தம் செய்வதை பார்க்க வேண்டும் எண்ணத்தில் நானும் அருகில் நின்றேன். அவ்வாறு விரலை சுத்தம் செய்யும் போது நன்கு வேகவைக்கப்பட்ட சக்கரவல்லிக் கிழங்கை பிட்டுப் பார்த்தால் எப்படி பின்று விடுமோ அப்படி விரல் தனியாக பின்று வந்துவிட்டது. அதை அருகிலிருந்து பார்த்த எனக்கு மயக்கம் வந்துவிட்டது. கட்டுப்போட்டவர் தனியாக வந்த விரலை சேர்த்து வைத்து கட்டுப்போட்டுவிட்டார். தண்ணீர் கொண்டு வந்து எனக்கு கொடுத்து என்னை எழுந்து வரச் செய்தார்கள். எழுந்து மருத்துவரிடம் சென்றேன். ஒவ்வொரு நாளும் கட்டை அவிழ்த்துப் பார்க்காமல் ரிப்பீட் என்று எழுதிக்

கொடுத்தீர்களே விரல் என்ன நிலையில் இருக்கிறது என்று பாருங்கள் என்று கோபப்பட்டு, இனி யார் வந்தாலும் இப்படிக் கவனக்குறைவாக இருந்து மேலும் பாதிக்காமல் காப்பாற்ற முயற்சி செய்யுங்கள், என்று கூறிவிட்டு சென்னையில் ஒரு சிறப்பு மருத்துவரிடம் செல்லத் திட்டமிட்டு என் அபிப்ராயத்தைக் கூறினேன். மருத்துவர் என்ன கூறினார் தெரியுமா? இனி பாதிக்கப்பட்ட விரலைத் துண்டிப்பது ஆம்ப்யூட்டேஷன் தவிர வேறு ஒன்றும் செய்ய இயலாது என்று கூறி, திங்கட்கிழமை டி.ஏ.இ. நகரிய மருத்துவ மனையில் உள்ள ஆபரேசன் தியேட்டரில் ஆம்ப்யூட்டேஷன் பண்ண பதிவு செய்து கொண்டார். திங்கள் காலை 8 மணிக்கு கொண்டு வரும்படி கூறினார். வியாழக்கிழமை இரவு முதல் ஞாயிறு இரவு வரை தொழுது மற்றும் துஆ செய்வது மட்டுமே என் இயக்கமாக இருந்தது. எப்படி துஆ செய்தேன் தெரியுமா? காதர் அவுலியா அவர்களே, என் மகனார் விரல் பாதிக்குமேல் பாதிக்கப்பட்டுவிட்டது. மருத்துவர் பாதிக்கப்பட்ட விரலை அகற்றிவிட்டு மேற்கொண்டும் பாதிக்காமல் வேண்டுமானால் செய்ய முடியும். ஆனால் முழுவிரலை உண்டாக்க மருத்துவரால் முடியாது. ஆகையால் தாங்களால்தான் முடியும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். அவ்வாறு நடந்தால் நான் குடும்பத்துடன் நாகூர் மறுபடியும் வருகிறேன் என்று முடித்தேன். அன்று இரவு தொழுகைக்குப்பின் படுக்கும் பொழுது கூட இந்த எண்ணத்துடன்தான் படுத்தேன். அதிகாலை நான்கு மணி இருக்கும், தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையே என்ன கண்டேன் தெரியுமா? என் குடும்பத்துடன் குதிரை வண்டியில் அக்காலத்தில் ஆட்டோ ரிக்ஷா கிடையாது. பின் இருக்கையிலிருந்து வண்டியில் உள்ள தடுப்புக் கம்பியை அகற்றிவிட்டு நான் இனிமேல் நாகூர் வரமாட்டேன் என்று கூறிவிட்டுச் சென்ற என்னை வரவைத்து விட்டீர்களே என்று தர்காவின் வெளிப்புற வாசலில் காலை வைத்தேன். அச்சமயம் பால்காரன் வீட்டிலுள்ள காலிங்க் பெல்லை அழுத்தி விட்டான். தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையே இருந்த நான் நன்கு தெளிவாக விழித்துவிட்டேன். பஜர் தொழுதேன். தொழுதுவிட்டு என் மனைவியிடம் கண்ட கனவை விளக்கினேன். அவள் என்ன கூறினாள் தெரியுமா? நாகூர் வருகிறேன் என்று சொல்லுங்கள் நல்லபடியாக விரல் ஆறிவிடும் என்பதைத் தான். அதற்கு நான் சரி என்று சொல்லாமல் தொடர்ந்தேன். இரவு தூங்கும்போது இதையே நினைத்தேன். என் நினைப்பு கனவாகி விட்டது. பிள்ளையின் விரல் பாதி அழுகி தனியாக வந்துவிட்டது. தற்சமயம் மருத்துவர் சொல்வது போல் செய்யாமல நாகூர் வருவதாக நான் எண்ணிக்கொண்டால் அது அறிவீனம். விரல் மேலும் பாதிக்கப்டும். எம் மகான் மீதுள்ள நம்பிக்கை மேலும் குறைந்துவிடும். நீ மருத்துவர் சொன்னபடி பிள்ளையைக் கூட்டிச்செல், அவர் செய்வதை செய்யட்டும் என்று அறிவுரை கூறிவிட்டு ஆபிஸுக்குச் சென்று முதல் பேப்பரை எடுத்து, விரல் பாதிதான் தேறும்.

முழுவிரல் எதிர்பார்க்க முடியாது. அப்படி உருவானால் நாகூர் வருகிறேன் என்று கையொப்பம் இட்டு என் ஆபிஸ் மேஜையில் வைக்கப்பட்டுள்ள கண்ணாடிக்கு இடையே சொருகி வைத்துவிட்டேன். உடனே ஒரு எண்ணம் தோன்றியது. ஒரு வேளை பையனுடைய விரல் நல்லபடியானால் நாம் பதட்டத்தில் பார்த்தோம் விரல் நல்லபடிதான் இருந்து இருக்கிறது என்று எண்ணத்தை மாற்றிக் கொள்ளக் கூடாது என்று மேஜையில் கண்ணாடி அடியில் வைத்த காகிதத்தை எடுத்து எழுதி வைத்தேன். என் வீட்டிற்கும் அணுசக்தி மின் நிலையத்திலுள்ள என் ஆபிஸிற்கும் தொலைத் தொடர்பு அப்பொழுதுதான் ஏற்படுத்திக் கொண்டிருந்தார்கள். எனவே மருத்துவர் என்ன செய்தார் என்று அறிந்து கொள்ள ஆவலுடன் இருந்தேன். என் வீட்டில் அருகில் வசித்த ராமமூர்த்தி என்ற பொறியாளர் எதிர்பாராத விதமாக கல்பாக்கம் அணுசக்தி நகரிலிருந்து அணுமின் நிலையம் வந்தார். ஆவலுடன் நான் என் மகனாருக்கு நடந்ததைக் கூறினேன். அணுசக்தி நகர் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருந்ததையும் அவரிடம் விளக்கமாக கூறினேன். தான் வரும் வழியில் என் மகன் கையில் கட்டுப்போட்டுக் கொண்டு வீடு திரும்புவதைக் கண்டதாகக் கூறினார். நான் மாலை அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய போது என் மகன் விளையாடிக் கொண்டிருந்தான். என் மனைவி மருத்துவர் கட்டவிழ்த்துப் பார்த்த பொழுது புதுவிரல் புதிய நகத்துடன் இருந்ததாகவும் மூன்று நாட்கள் மருந்து வைத்துக் கட்டுப்போட்டால் போதும் என்று மருத்துவர் சொல்லி விட்டதாகவும் கூறினார். என்னால நம்பவே முடியவில்லை. எனக்கு உடனே கட்டை அவிழ்த்துப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம், சிறிது எச்சரித்து, கட்டை அவிழ்த்துப் பார்க்கும் பொழுது விரலின் நான் பார்த்த ஒரு பகுதி துண்டித்து வந்துவிட்டால் என்ற பயம் என்னைத் தடுத்தது. சிறிது சிந்தித்தேன். என் மனைவியிடம் நாளை மாலை 5 மணிக்கு கட்டவிழ்த்து புதுக் கட்டுப்போடும் சமயம் நான் என் அலுவல் முடிந்து நேரடியாக மருத்துவமனைக்கு வருகிறேன். (டிரஸிங் ரூம்) கட்டவிழ்த்து புதுக்கட்டுப்போடும் சமயம் என் கண்களால் பார்க்க வேண்டும் என்று என் அபிப்ராயத்தை தெரிவித்துவிட்டு, அணுசக்தி நிலையத்திலுள்ள என் ஆபிஸிற்குச் சென்றேன். அன்றைய தினம் முழுவதும் என் முக்கிய வேலைகளை செய்து கொண்டிருந்த போது மாலை 5 மணிக்கு மருத்துவமனை சென்று கட்டவிழ்த்து விரலைப் பார்க்க வேண்டும் என்ற ஆர்வத்திலேயே என் எண்ணம் நிலைத்திருந்தது. நான் மாலை 5 மணிக்கு மருத்துவமனையிலுள்ள கட்டுப்போடும் அறைக்குச் சென்றேன். என் மனைவி நான் கூறியபடி அந்த அறையின் முன் என் மகனுடன் நின்று கொண்டிருந்தார். அவர்களுடன் அறைக்குள் சென்றேன். புதிய கட்டுப்போட ஏற்கனவே போட்ட கட்டை அவிழ்த்தார். அந்த விரலைப் பார்த்தவுடன் அதிர்ந்து

என் கண்களை நான் நம்பமுடியவில்லை. புதிய நகத்துடன் முழுவிரலையும் கண்ட நான் ஆச்சரியம் அடைந்தேன். என் பகுத்தறிவு என்னை பல கேள்விக் கணைகளை வீசியது. ஆழ்ந்து சிந்திக்க வைத்தது. இந்த அற்புதம் தடம்புரண்டு சென்ற என்னை சரியான பாதைக்கு செல்ல வைத்தது.

குத்துபுஸ்ஸமான், ஷம்ஸுல் வுஜூத், ஜமாலியா அஸ்ஸையித் கலீல் அவுன் ஹாஷிமிய் மௌலானா நாயகம் என்று உலகம் போற்றும் நமது செய்கு நாயகம் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதில் நமது கவனத்தைச் செலுத்துவோம்.

1. அற்புதத்தை நடத்துவது அல்லாதான் நான் அல்ல. அறிவுப்பூர்வமாக அல்லாஹ்வை அறிய விரும்புபவர்கள் வாருங்கள் என்று பலமுறை கூறிவிட்டார்கள்.

2. ஹக்கின் ஒன்றிப்பே சுவர்க்கம், ஒன்றாமை நரகம் என்பதும் வாப்பா நாயகம் அவர்களுடைய தெளிவான விளக்கம்.

3. நாகூரில் நாங்கள் நம்பிச் சென்ற வள்ளல் பாதுஷா நாயகம் அவர்களும் பெருமானார் ஸல்லல்லாஹு இலைஹி வஸல்லம் அவர்களின் பேரர் அல்லவா?

4. அவர்கள் மறைந்து வாழ்ந்து கொண்டு இருந்தாலும், அவர்களை நாடிவருபவர்களின் தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டுமல்ல, உணவுக்காக பசியுடன் அங்குள்ள பசியாளிகளின் உணவுத் தேவைகளையும் தீர்த்து வைக்கக் காரணமாகி உள்ளார்கள்.

5. சாதாரண மக்களும் இவ்வுலக வாழ்வு முடியும் போது அம்மக்கள் நேர்மையுடன் வாழ்ந்து ஹக்குடன் ஒன்றிப்போய் சுவர்க்க வாழ்வு வாழ வழி இருக்கும் பொழுது இம்மகான் சிறிதும் சந்தேகமின்றி ஹக்கில் ஹக்காய்க் கலந்து வாழ்ந்தவர்கள் அணுவளவிலும் சந்தேக மறக்கூறுவதில் மாற்றுக் கருத்து யாருக்காவது இருக்க முடியுமா?

நன்கு சிந்தித்து இக்கராமத்தை (அற்புதத்தை) நடத்தியது யார்? நாகூரில் மறைந்து வாழும் ஷாஹுல் ஹமீது நாயகமா? அல்லாஹ்வா? என்று முடிவு செய்வோம். சந்தேகத்தை வாப்பா நாயகம் அவர்களிடம் கேட்டுத் தெளிவடைவோம்.

---

இப்னு ஜவ்ஸி (ரஹ்) கூறினார்கள்: அறிவாளிகளின் சபைகள் அறிவை அதிகரிக்கும். முட்டாள்களுடன் நேரம் கழிப்பது மடமையை அதிகரிக்கும். ஏழைகளுடன் கலந்து வாழ்வது பெருமையை இல்லாமலாக்கும்.

*(நூல்– அத்தத்கிரஹ் பில் வலி)*

# அல்லாஹ்வின் அற்புத இறைத்தூதர்!

மதுக்கூர் ஜஉபர் ஸாதிக் – அபுதாபி, அமீரகம்

அல்லாஹ்வின் அற்புத இறைத்தூதர்
அகிலத்தின் அருளான இறைத்தூதர்
அகிலத் தாரின் இறைத்தூதர்
அகிலமாய் விரிந்த இறைத்தூதர்

ஏகம் தந்த இறைத்தூதர்
ஏகமாய் மிளிர்ந்த இறைத்தூதர்
எதுகை யில்லா இறைத்தூதர்
எழுச்சி தந்த இறைத்தூதர்

சற்குணங்களின் இறைத்தூதர்
சகலமும் சாஷ்டமிக்கும் இறைத்தூதர்
ஆரம்பமான இறைத்தூதர்
அந்தமுமான இறைத்தூதர்

ஐனில்லா அறபான இறைத்தூதர்
மீமில்லா அஹ்மதான இறைத்தூதர்
தன்ஸீஹும் தஷ்பீஹுமான இறைத்தூதர்
தன்ஸீஹ் மஹ்ளான இறைத்தூதர்

தூதுவத்தின் துவக்கமான இறைத்தூதர்
தூலத்தின் தூதுமான இறைத்தூதர்
பிறப்பில்லாப் பிரபஞ்சத்தின் இறைத்தூதர்
பிரிதான்றிலதாய் நிற்கும் இறைத்தூதர்

முன்வந்த தூதர்களின் இறைத்தூதர்
முழுமறையும் சுமந்த இறைத்தூதர்
ஞானத்தின் சுவை தந்த இறைத்தூதர்
ஞாலத்தில் நிறைந்து நிற்கும் இறைத்தூதர்

தன்மயமான இறைத்தூதர்
தவக்கோலம் தந்த இறைத்தூதர்
தன்னில் தானான இறைத்தூதர்
தரணிபோற்றும் இறைத்தூதர்

இல்லறம் சுமந்த இறைத்தூதர்
துறவறம் துறந்த இறைத்தூதர்
சமூகத்தைக் காத்த இறைத்தூதர்
சமதர்மம் கண்ட இறைத்தூதர்

முத்தொழில் ஆற்றும் இறைத்தூதர்
முக்காலமும் உணர்ந்த இறைத்தூதர்
அணுவிலும் அணுவான இறைத்தூதர்
ஆற்றல்களின் அலங்காரம் இறைத்தூதர்

இரண்டை ஒழித்த இறைத்தூதர்
இறைவனின் பூர்விக இறைத்தூதர்
விதிமாற்றும் வித்தகம் இறைத்தூதர்
வினைகளின் மூல இறைத்தூதர்

மோட்சம் அருளும் இறைத்தூதர்
மௌட்டிகம் அழித்த இறைத்தூதர்
அழிவிலாப் புகழுடை இறைத்தூதர்
அயலில்லா நிலைகண்ட இறைத்தூதர்

எல்லாம் கொண்ட இறைத்தூதர்
எளிமையும் கண்ட இறைத்தூதர்
துவிதம் ஒழித்த இறைத்தூதர்
துன்மார்க்கம் அழித்த இறைத்தூதர்

தேவனைக்கண்ட இறைத்தூதர்
தெளிவான வாழ்வு தந்த இறைத்தூதர்
தேவாமிர்த வேதம் தந்த இறைத்தூதர்
தேவைகளில்லாத இறைத்தூதர்

போர்கள் கண்ட இறைத்தூதர்
பொறுமையும் கண்ட இறைத்தூதர்
விண்ணிலும் சிறந்த இறைத்தூதர்
மண்ணிலும் சிறந்த இறைத்தூதர்

அநாதை நிலை கண்ட இறைத்தூதர்
அகிலத்தார் விரும்பும் இறைத்தூதர்
அதிசயம் காட்டும் இறைத்தூதர்
ஆதியும் வேண்டும் இறைத்தூதர்

பகைவரை ஒழித்த இறைத்தூதர்
பகைமையை வெறுத்த இறைத்தூதர்
பண்பில் சிறந்த இறைத்தூதர்
பரம்பொருளாய் மிளிர்ந்த இறைத்தூதர்

பரம்பொருளாய் மிளிர்ந்த இறைத்தூதர்
பரம்பொருளாய் மிளிர்ந்த இறைத்தூதர்
பரம்பொருளாய் மிளிர்ந்த இறைத்தூதர்
பரம்பொருளாய் மிளிர்ந்த இறைத்தூதர்.

# உலகத்தலைவர்கள் போற்றும் உத்தம நபி!

**ந**பிகள் நாயகத்தின் சிறந்த குணநலன்கள், நற்பண்புகளை உலகின் பல பகுதிகளிலும் பல்வேறு காலக்கட்டங்களிலும் வாழ்ந்த மாபெரும் தலைவர்கள் போற்றிப் புகழ்ந்துள்ளனர். சர்வசக்தியும் படைத்த இறைவன் தனக்கு துணையாக நிற்கின்றான் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை நபி அவர்களுக்கு இல்லாதிருந்தால் இவ்வளவு பிரம்மாண்ட சாதனைகளை அவர்களால் செய்திருக்க முடியாது – சர். வில்லியம் மூர்–

திருக்குர்ஆனுக்கும் இறைத் தூதர் முஹம்மத் அவர்களுக்கும் எனது விசுவாசத்தை வழங்குகிறேன் –நெப்போலியன்–

முஹம்மத் நபியின் நற்குணங்கள் எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றன. மனித வாழ்க்கை பற்றிய அவரது கொள்கைகளை நான் ஆதரிக்கிறேன்.

– பெர்னாட்ஷா–

அறம் செய்வது எப்படி என்பதைப் பற்றி தெளிவாகவும், திட்டவட்டமாகவும் வரையறுத்துக் கூறிய ஒரே ஒரு சட்ட மேதையாக விளங்குபவர் முஹம்மத் நபி ஒருவரே. –கிப்பன்–

ஆட்சிபுரியும் அமைச்சர்கள் நபி பெருமான் வகுத்த சீர்திருத்தங்களைப் பின்பற்றி நடக்க வேண்டும். –மகாத்மா காந்தி–

கண்மூடித்தனமான பழக்கங்களைக் கைவிடச் செய்து மக்களை உயர்ந்த சமுதாயமாக மாற்றி நெருக்கடியான நேரங்களிலும் லட்சியங்களை நிறை வேற்றத் தவறாத கடமை வீரர் நபிகள் நாயம். –அறிஞர் அண்ணா–

நபிகள் இவ்வுலகில் மக்களுக்குப் புரிந்த போதனைகள் அனைத்தும் உண்மையானவை, கருத்தாழம் மிக்கவை. விசுவாசம் கொள்ளத்தக்க வேதம் என்ற ஒன்று இருந்தால் அது நபிகள் நாயகத்துக்கு அருளப்பட்ட திருக் குர்ஆன்தான். –தாமஸ் கர்லைல்–

நபிகள் நாயகத்தின் வாழ்க்கை முறையைக் காட்டிலும் ஆச்சரியம் தரக்கூடிய

வாழ்க்கை முறை வரலாற்றிலேயே வேறு எங்கும் இல்லை. அவரைப் போல உலகின் தலைவிதியில் சூழ்ந்த விளைவுகளை ஏற்படுத்திய மனிதர்களைக் காணுதலும் அரிது. –ஜி.ஜி. கெல்லட்–

முஹம்மது நபியிடம் கலங்காத நெஞ்சுடைய ஞானதீரமும் அழியாத நம்பிக்கையும் இருந்தன. ஆதலால் அவருக்கு, எடுத்த காரியம் யாவினும்வெற்றி, எங்கும் வெற்றி, எதனிலும் வெற்றி. இடையிடையே நான் என் மனத்திற்குள் முஹம்மது நபி அவர்களைப் பற்றிச் சித்திரம்போட்டுப் பார்ப்பது வழக்கம். நடுப்பாலை வனத்தில் நள்ளிரவிலே தனி மணல் வெளியிலே ஒட்டகையின் மீது தனியாக ஏறிக்கொண்டு போகிறார். கேள்வியாலும் நெடுங்காலத்து பக்தியாலும் நிகரற்ற அன்பினாலும் ஞானத்தாலும் பக்குவப்பட்ட அவருடைய இதயம் அப்படிப்பட்ட இடத்தில் அல்லாவை நாடுகிறது. அங்கு ஞான ஒளி வீசிற்று. நபி அல்லாவைக் கண்டார் –மகாகவி சுப்ரமணிய பாரதியார்–

உயர்ந்த லட்சியம். குறைவான வசதிகள், வியப்பூட்டும் வெற்றி, ஆகிய இம்மூன்றும் தான் மனித நுண்ணறிவை மனித ஆற்றலை அளந்திடும் அளவு கோள்கள் என்றால் இந்த நவீன வரலாற்றின் எந்த மாமனிதரையும் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் ஒப்பிட எவருக்குத்தான் துணிச்சல் வரும்.

புகழ்மிக்க மனிதர்களெல்லாம் ஆயுதங்களை உருவாக்கினார்கள். சட்டங்களை இயற்றினார்கள். பேரரசுகளை நிறுவினார்கள். அவர்கள் செய்ததெல்லாம் இவைதாம். பெரும்பாலும் தமது கண்களின் முன்பே சிதைந்து விழுந்துவிட்ட உலகாதாயக் கோட்டைகளைத்தான் அவர்களால் நிறுவ முடிந்தது. ஆனால் முஹம்மது அவர்களோ போர்ப்படைகள், சட்டமியற்றும் சபைகள், பேரரசுகள், மக்கள் சமுதாயங்கள், அரச வம்சங்கள், ஆகியவற்றை மட்டும் பாதித்து அவற்றை மட்டும் வெற்றிகொள்ளவில்லை. அவற்றுடன் அன்றைய உலகின் மூன்றிலொரு நிலப்பரப்பில் வசித்துவந்த கோடிக்கணக்கான உள்ளங்களையும் ஈர்த்தார்கள். வழிபாட்டுத் தலங்களையும் சமய நெறிகளையும் பல்வேறு கருத்துகளையும் கொள்கைகளையும், நம்பிக்கைகளையும் ஆன்மாக்களையும் ஈர்த்து அவற்றில் தமது தாக்கங்களைப் பதித்தார்கள். வெற்றியின் போது அவர்கள் காட்டிய பொறுமை, பணிவு, சகிப்புத்தன்மை, தாம் ஏற்றுக் கொண்ட கருத்துக்காக தம்மையே முழுமையாய் அர்ப்பணித்துக் கொண்ட அவரது உயர் நோக்கம், ஆழ்ந்த விருப்பம், அரசாட்சியை அடைந்திட வேண்டுமென்ற குறுகிய எண்ணம் கொள்ளாமல் உலகப்பற்றற்று வாழ்ந்து வந்த நிலை. அவர்களின் முடிவில்லாத

தொழுகைகள், பிரார்த்தனைகள், இறைவனுடன் அவர்கள் நடத்திவந்த மெய்ஞ்ஞான உரையாடல்கள், அவர்களின் மரணத்துக்குப் பின்னரும் அவர்கள் அடைந்த வெற்றி, இவையனைத்துமே அவர்கள் ஓர் ஏமாற்றுக்காரர் என்றோ மேசடி குணம் உடையவர் என்றோ பறைசாற்றிடவில்லை. மாறாக, சமயக் கொள்கை ஒன்றை நிலைநாட்டிட அவர்களுக்கிருந்த மனோ உறுதியைத்தான் பறை சாற்றுகின்றன.

அவருடைய இந்த சமயக் கொள்கை இரண்டு அடிப்படைகள் கொண்டது. ஒன்று இறைவனின் ஒருமை, மற்றொன்று இறைவனின் ஸ்தூலப் பொருளற்ற தன்மை. முந்தியது, இறைவன் என்றால் என்னவென்று எடுத்துரைக்கிறது. பிந்தியது இறைவன் என்னவாக இல்லையென்னு தெரிவிக்கின்றது. ஒன்று தவறான கடவுள்களைத் தனது பலத்தால் தூக்கியெறிகின்றது. மற்றொன்று பிரச்சாரத் துணையுடன் ஒரு புதிய கருத்தை உருவாக்க விழைகின்றது.

தத்துவப் போதகர். சொற்பொழிவாளர், இறைத்தூதர், சட்ட நிபுணர், மாபெரும் போர் வீரர், கருத்துகளை வென்ற வரலாற்று வீரர், பகுத்தறிவுப் பூர்வமான கொள்கைகள், நம்பிக்கைகளை நிலை நாட்டியவர், மாயைகள், கவர்ச்சிகள் இல்லாத பகுத்தறிவு ரீதியில் ஒரு கொள்கைவழி நாகரீகத்தை உருவாக்கியளித்த மாமேதை. ஒரே ஆன்மிகத் தலைமையில் இருபது பூவுலகப் பேரரசுகளின் நிறுவனர் தான் முஹம்மத் அவர்கள். –தலைசிறந்த வரலாற்றாசிரியர் லா மார்ட்டின்–

---

- எவர் கப்ருகளுக்குச் சென்று ஸூரா இஃக்லாஸை பதினொரு தடவை ஓதி – அதன் நன்மையை கப்ராளிகளுக்குச் சேர்த்தாரோ, அவருக்கு மரணித்தவர்களின் எண்ணிக்கையின் அளவு நன்மை கிடைக்கும்.

(அலீ இப்னு அபூதாலிப் ரழியல்லாஹு அன்ஹு – உம்தத்துல் காரீ)

- உங்களின் பொருட்களை ஸக்காத்தைக் கொண்டு பாதுகாத்துக் கொள்ளுங்கள். உங்களின் நோய்களுக்கு ஸதகாவை கொண்டு மருந்திடுங்கள். உங்களின் சோதனைகளை துஆவின் மூலம் சரி செய்யுங்கள்.

(ஹஸன் இப்னு அலீ (ரலி) தப்ரானி பைஹகி)

- நன்றியுடையவான இரு, எல்லாம் நலமாக இருக்கின்ற போது நன்றி செலுத்துவது சுலபமான காரியம். ஒரு ஸூஃபியானவர் தனக்குக் கொடுக்கப்பட்ட தற்கு மட்டுமின்றி தனக்கு மறுக்கப்பட்ட அனைத்திற்கும் நன்றி செலுத்தக் கூடியவாக இருப்பார். (ஷம்ஸ் தப்ரேஸ் ரஹிமஹுல்லாஹ்)

# காரீ அப்துல் பாஸித் (ரஹ்)



உலகில் தலைசிறந்த காரீயான ஹாபிழ், அப்துல் பாசித் முஹம்மதுஅப்துஸ்ஸமத் 1927 இல் எகிப்தில் பிறந்தார். 10 வயதில் குர்ஆன் ஓதக் கற்று 12 வயதிற்குள் 12 வயதிற்குள் ஸப்உ கிராஅத் எனப்படும் 7 ஓதும் முறைகளையும், 14 வயதிற்குள் 10 பாணிகளில் ஓதவும் கற்றுக் கொண்டார். அல்மின்ஷாவி, அப்துல் பாசித், முஸ்தபா இஸ்மாயில் மற்றும் அல்ஹுஸாரி ஆகியோர் எகிப்தியர் ஓதும் பாணியைச் சேர்ந்தவர்கள். அப்துல் பாசித் கோல்டன் த்ரோட் (துங்கத் தொண்டை) வாய்ஸ் ஆஃப் ஹெவன் (சுவனத்தின் குரல்) என அழைக்கப்பட்ட தனித்துவ உணர்ச்சியுடன் ஓதுபவர்.

அப்துல் பாசித்துக்கு மஹ்மூத் மற்றும் அப்துல் ஹமீத் அப்துல் சமத் என இரண்டு மூத்த சகோதரர்கள் இருந்தனர். அவர்கள் குர்ஆனை மனனம் செய்து கொண்டிருந்தபோது 6 வயதில் இவரும் சேர்ந்து கொண்டார். மனப்பாடம் செய்வதில் விரைவாகவும் தஜ்வீது எழுத்து உச்சரிப்பில் தெளிவாகவும் அவர் விளங்கினார். மேலும் அவர் இத்துறையில் பயிற்சி பெற அவரது தந்தை –தாத்தா டான்டா (கீழ் எகிப்து) நகருக்கு அனுப்பினர். டாண்டா வெகு தொலைவிலிருந்தாலும் அச்சிறுவர் ஆர்வமாகப் புறப்பட்டார். அவர் ஷேக் முஹம்மது சலீம் என்ற அறிஞரிடம் தம் ஓதல்களை மதிப்பாய்வு செய்தார். பின்னர் ஏழு ஓதல்களின் அறிவியல் கிளாசிகல் உரையான அல்– ஷாதிபிய்யாவை மனனம் செய்தார். அப்துல் பாசித் 12 வயதை அடைந்தபோது கேனா கவர்னரேட்டின் (எகிப்து) அனைத்து நகரங்களிலும் மற்றும் கிராமங்களிலிருந்தும் கோரிக்கைகள் வந்தன. அவர் சென்ற இடமெல்லாம் அப்துல் பாசித்தை ஷேக் என பரிந்துரைத்தார். சலீமின் சாட்சியம் அனைவராலும் நம்பப்பட்டது. அவர் தமது 23 ஆம் வயதில் கெய்ரோவில் குர்ஆன் ஓதுனராக அதிகாரப்பூர்வ வாழ்க்கையைத் தொடங்கினார். ஷேக் அப்துல் ஃபத்தாஹ் அல் ஷாஷாயி, ஷேக் முஸ்தபா இஸ்மாயில், ஷேக் அப்துல் அசிம் ஜாஹிர்,ஷேக் அபுஅல் அய்னைய்ன் போன்ற ராட்சத காரீகள் இவரின் ஓதலில் மயங்கிக் கட்டுண்டனர்.1951 ம் ஆண்டு வானொலியில் குர்ஆன் ஓதுனராகச் சேர்ந்தார். பலநாடுகளுக்கும் பிரயாணம் செய்து பல பட்டங்களையும் பதக்கங்களையும் கௌரவங்களையும் பெற்றார். நீரிழிவு, கல்லீரல், மஞ்சள் காமாலை போன்ற நோய்களால் அவதியுற்ற அவர் நவம்பர் 30.1988 புதன் கிழமை அல்லாஹ்வை அடைந்தார்.

# அப்துர்ரஹ்மான் அல் சுதைஸ்



காரீ அப்துல் பாசித் அவர்களுக்குப்பின் உலகெங்கும் வாழும் கிராஅத் ரசிகர்களின் விருப்பமாக இருப்பவர். அப்துல் ரஹ்மான் பின் அப்துல் அஜீஸ் அல் - சுதைஸ் அவர்கள். இன்று அவர் ஓதும் பாணியில் பேஷ் இமாம்கள் அதிகமானோர் ஓதி மகிழ்கின்றனர். இவர் மஸ்ஜிதுல் ஹராமின் ஒன்பது இமாம்களில் ஒருவர்.

அல் சுதைஸ் அனாசா குலத்தைச் சேர்நதவர். 12 வயதிலேயே குர்ஆனை மனனம் செய்தர். ரியாத்தில் வளர்ந்த சுதைஸ் அல் முத்தனா பின் ஹாரித் தொடக்கப்பள்ளியில் படித்து ரியாத்தில் அறிவியல் நிறுவனத்தில் பட்டம் பெற்றார். 1983 இல் ரியாத் பல்கலைக்கழகத்தில் ஷரியாவில் பட்டம் பெற்றார்.முனைவர் பட்டமும் பெற்றார். 1995 இல் உம்முல் குரா பல்கலைக் கழகத்தில்பணிபுரிந்த பிறகு உதவிப் பேராசிரியராகப் பணி புரிந்தார்.

சுதைஸ் 1984 இல் தமது 24 வயதில் இமாமத் பொறுப்பைப் பெற்றார்.1984 இல் மஸ்ஜிதுல் ஹராமில் தமது முதல் பிரசங்கத்தை நிகழ்த்தினார். ஷேக் சவுத் அல் - ஷுரைம் 1994 முதல்2006 வரை தராவீஹ் தொழுகைகளில் அவரது பங்காளியாக இருந்தார். மீண்டும்2014,2019 மற்றும் 2020 இல் அவர்கள் ஹரமின் இரட்டையர்கள் எனப் பெயரிடப்பட்டனர்.

2005 ஆம் ஆண்டில் அவரின் குர்ஆன் மற்றும் இஸ்லாம் மீதான பக்தியை அங்கீகரிக்கும் வகையில் துபை சர்வதேச புனித குர்ஆன் விருது(டிஐஹெச்கியூஏ) ஏற்பாட்டுக் குழுவால் அதன் 9 ஆவது ஆண்டு இஸ்லாமிய ஆளுமை என்று பெயரிடப்பட்டது.

2010 இல் இந்திய சுகாதார அமைச்சர் குலாம் நபி ஆஸாத், பிரதமர் மன்மோகன் சிங் ஆகியோரை சந்தித்ததுடன்,2010 முதல்2012 வரை இந்தியா, பாகிஸ்தான், மலேசியா,பிரிட்டனுக்கு விஜயம் செய்தார்.

இளைஞர்களுக்கு இஸ்லாமிய சட்டம் கற்பிக்கப்படவேண்டுமெனக் கூறினார். இஸ்லாத்தில் தீவிர வாதம் மதவெறிக்கு இடமில்லையென்றும், இஸ்லாம் ஒரு மிதமான பாதையைக் கற்பிக்கிறது அதன் மூலம் பலஸ்தீனம், சோமாலியா, ஈராக், காஷ்மீர்,ஏமன்,ஆப்கானிஸ்தான் பிரச்னைகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் தீர்வ காணவேண்டும் என்றார். நவீன காலப் பிரச்சினைகளுக்குப் பல தீர்வுகளையும் துணிச்சலாகக் கூறிவருகிறார் சுதைஸ்.

# நாயகம் போன்றவர் நானிலத்தில் வந்ததிலை

(நேரிசை வெண்பா)

நாயகம் போன்றவர் நானிலத்தில் வந்ததிலை
தூயநபி வந்திலரேல் தூவுலகும் – மாயமாம்
மற்றெலாந் தோன்ற வழியேது மில்லையிந்
நற்கூற்றே உண்மை நவில்.

எழுதவுங் கற்றிலார் எந்த வெழுத்தும்
மொழிய அறிந்திலார் முற்றும் – எழிலோன்
திருவருளாஞ் ஞானத் தெளிவாம் அறிவில்
அருமறிஞ ரானா ரவர்.

கற்றிலா நம்நபி கல்விக் கருவூலம்
பெற்றுடைத் தாய பெருநூலாம் – பொற்குர்ஆன்
உற்றுரைத்த வற்புதமே ஊழிவா ழற்புதமாம்
கற்றறிக வென்பேன் கலை.

மனிதன் மனிதனாய் வாழவும் வைத்த
புனிதரே விண்ணிற் புவனந் – தனிலுமே
சூரிய சந்திரர் சூழ்ந்துள யாவுமே
நேரியர்க் கொப்பிலை நேர்.

கோடிக் கலைஞர்கள் கூடித் திருநபிக்கு
ஈடு கொடுப்பினு மீடாகா – ரேடு
படியா நபியவர்க்கு பாரினி லொப்பில்
படித்தவர் யாரும் பகர்.

திருநபியின் நல்வாழ்வைத் தீதறவே கற்றுப்
பெருமையாய் நாம்வாழின் பெற்றோ – மிருபதியும்
நற்பேறும் நற்பதியும் நன்மையும் பேரின்பம்
உற்றோமே வாழ்வி லுயர்வு.

நாயகம் வாழ்வினில் நன்மையும் நல்வினையும்
நேயமுந் தூய்மையும் நீதமும் – தூயதாம்
நன்னடத்தை வாய்மை நனிபெரி தென்றனர்
இன்னு மொழிந்தன ரினிது.

குடிகாமம் பொய்களவு கோரச் சதியும்
துடிவதை வன்கொலை சூதும் – பிடிவாதம்
தற்பெருமை கோள்கூறல் சாடல் பொறாமையும்
மற்றெலாங் கேடென்றார் வாட்டும்.

காரிருளில் வாழ்ந்த கண்ணில்லா அந்தகரை
ஈருலகின் கண்ணு மிறையொளி – சீருறவே
பெற்றிகம் வாழவும் பேருதவி செய்தார்க்கு
உற்றுயர் நன்றி யுரை.

---

# சிந்திப்போமா!

♦ பெண்கள் இல்லையென்றால் ஆறுதல் சொல்ல ஆள் இல்லை. பெண்களே இல்லையென்றால் ஆறுதலே தேவையில்லை.

–சார்லி சாப்ளின்–

♦ யார் என்ன சொன்னாலும் உன் கொள்கையை மாற்றிக் கொள்ளாதே! ஒரு சமயம் நீ மாற்றினால் ஒவ்வொரு முறையும் நீ மாறவேண்டி இருக்கும்.

–கண்ணதாசன்–

♦ பத்து மாதம் சுமந்ததை அம்மா பல தடவை சொல்லிக் காட்டியிருப்பாள். ஆனால் வாழ்நாள் முழுவதும் எல்லோரையும் சுமந்ததை தந்தை ஒரு தடவை கூட சொல்லிக்காட்டியிருக்கமாட்டார்.

இந்தியா சந்திராயன் திட்டத்தின் மூலம் நிலவை வெற்றிகரமாக கால்பதித்து விட்டது. இந்நேரத்தில் முஸ்லிம்கள் விஞ்ஞானத்தின் முன்னோடிகளாக இருந்தனர் என்பதை சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள் அப்பாஸிகள் என்ற நூலிலிருந்து ஒரு பகுதியைப் பார்ப்போம்.

# பைத்துல் ஹிக்மா

## بَيْتُ الْحِكْمَة (The Home of Wisdom)

*இஸ்லாமிய ஆட்சி விரிவடையத் தொடங்கியதும் அராபியர் ஏனைய நாட்டிலுள்ள விஞ்ஞானத் துறையிலும் தங்கள் கவனத்தைச் செலுத்தினர். விஞ்ஞானத்தினால் முன்னேற்றம், நாகரிகம் முதலானவற்றை அடையலாம் எனத் திட நம்பிக்கையை தாம் உள்ளத்துக் கொண்டதனாலும் விஞ்ஞானமே இதற்குச் சிறந்த வழியாதலாலும் அதனின்றும் பயன்பெற மக்கள் நாடினர். அப்பாஸிய ஆட்சிக் காலத்திலே பல நூல்களையும் மொழிபெயர்ப்பதில் முயற்சி எடுத்தனர். காலன்* **Galan**, **Hippocrates** *ஹிப்போக்ரோட்ஸ் முதலானவர்கள், முதன்மை வாய்ந்த நூல்கள் அபூ யாபியா பின் அல் பாட்ரிக் என்பவரால்* **Abu Yabya bin al Batriq***என்பவரால் மொழிபெயர்க்கப்பட்டன. மொழிபெயர்ப்பாளர் களுக்கெல்லாம் தலைவராய்* **Hunayn bin Ishaq** *ஹுனைன் பின் இஸ்ஹாக் விளங்கினார். இவர் பைத்துல் ஹிக்மாவின் தலைவராக நியமிக்கப்பட்டார். இவர் மகனான இஸ்ஹாக்கும், மருமகனான* **Hubaysh bin al Haasan,** *ஹுபைய்ஸ் பின் அல் ஹஸன்,* **Greek** *கிரீக்-இல் எழுதப்பட்ட நூல்களை அறபியில் மொழிபெயர்க்க துணைபுரிந்தார். ஹாரூன் ரஷீத் அரசர் பஃதாதிலே இந்த*

بَيْتُ الْحِكْمَة

*எனும் அறிவின் இல்லத்தை கி.பி.832இல் நிறுவினார். இந்த பைதுல் ஹிக்மாவுடன் ஒரு நூல்நிலையமும் வானிலை ஆராய்ச்சிக்கூடம் ஒன்றும் இணைக்கப்பட்டிருந்தன. இதிலே*

வானாராய்ச்சியாளர் கோளங்களின் இயக்கத்தை நன்கு ஆராய்ந்தனர். சூரியவருஷத்தின் காலம், பூமியின் தட்பவெப்ப மண்டலங்கள் முதலியவற்றைத் தெளிவாகக் கணித்தனர். இப் பொதுநூல் நிலையமானது அராபியர்களின் சரித்திரத்திலேயே முதன் முதலானதாகும். அவர் மகன் மஉமூனின் ஆட்சிக் காலத்திலே கிரேக்கர்களின் தத்துவ அறிவு அராபியர்களை விழிப்புறச் செய்தது. முத்தஸிலியாக்களின் யுக்திக்கு ஒவ்விய அறிவின் பயனாய் மஉமூன் வேத விதிகளும் ஏனைய ஒழுங்கு முறைகளும் காரணங்களோடு கூடியதாய் இருத்தல் வேண்டுமெனக் கருதி கிரேக்கத் தத்துவங்களையும் அதில் புகுத்த முற்பட்டார். இதனிமித்தமே முன்போலல்லாது பல திருத்தங்களுடன் பைத்துல் ஹிக்மாவை விஞ்ஞானக் கூடமாகவும், வான ஆராய்ச்சிக் கூடமாகவும் பொது நூல் நிலையமாகவும் மாற்றி அமைத்தார். இவ்வகையில் மாற்றப்பட்ட பைத்துல் ஹிக்மாவிலே மொழி பெயர்ப்பு, பிரதிபண்ணல், கற்பித்தல், நூல்கள் இயற்றுதல் முதலான பலவகைப்பட்ட செயல்கள் செயற்பட்டன. இந்த அறிவின் இல்லத்திற்கு மொழிபெயர்ப்பாளர் பலர் நியமிக்கப்பட்டனர். இவர்களுக்கென பலதரப்பட்ட சம்பளமும் வழங்கப்பட்டு வந்தது. தத்துவ ஞானம் (فلسفة) **Philosophy** தருக்கம் (منطق) **Logic** வைத்தியம் **Medicine** (طِبّ) பௌதிகம் (طبعية)**Physics** இரசாயனம் **Chemistry** (كِيْمِيَاء) வானசாஸ்திரம் (فلك) **Astronomy** முதலான கலைகளை கிரேக்க **Greek** மொழிகளிலிருந்து அறபிக்கு மொழிபெயர்த்தனர். சில பாரசீக இலக்கியங்கள் பழமொழிகள் **Proverbs,** (أمثَال) கதைகள் (حكايات) **Tales** (ادب – **Literature** முதலானவற்றையும் இந்திய நூல்களிலிருந்து வான சாஸ்திரம், கணிதம் **Mathematics** முதலானவற்யையும் அறபியில் மொழிபெயர்த்தனர். வானத்திலுள்ள நுணுக்கமான பொருள் களை நுணுக்கமான கருவிகளைக் கொண்டு ஆராய்வதற்காக எண்ணற்ற வான ஙஸ்திரிகளை மஉமூன் பைத்துல் ஹிக்மாவுக்கு நியமித்தார். எனவே இந்த அரபிகள் இக்கலைக்கூடத்தில் மொழிபெயர்ப்பில் மட்டும் ஈடுபட்டிருக்கவில்லை.

அவர்கள் அவர்களுக்குச் சொந்தமான விவேகம், பலதரப்பட்ட விஞ்ஞானம், கலை முதலான பல கலைகளிலும் ஈடுபட்டு சமூகம், அறிவு, நாடு முதலானவற்றிற்குத் தொண்டுகள் பல புரிந்தனர்.

## இஸ்லாமிய வரலாற்றில் சிறந்து விளங்கிய காரீகள்.

1. முஹம்மது ரிஃபாத் (1882-1950)

2. முஹம்மது ஸலாமா (1899 -1982)

3. முஸ்தபா இஸ்மாயீல் (1905 - 1978)

4. முஹம்மது கலீல் அல்-ஹுஸாரி (1917 -1980) செய்க்அல் மகாரி)

5. முஹம்மது சித்தீக் அல் - மின்ஸாவி (1920-1969)

6. காமில் யூசுப் அல்- பாத்திமி (1922 -1969)7. அப்துல் பாஸித் அப்துஸ் ஸமது (1927-1988)

## *மனமே...மனமே...!*

மனிதனே, நீ செய்யும் பாவம் எவ்வளவு அசிங்கமானது என்பது உனக்கே தெரிகிறது. அதற்குப்பின்னும் ஏன் தவ்பாசெய்ய யோசிக்கிறாய்?

பாவம் செய்துவிட்டு நீ அசட்டையாக அமர்ந்து கொண்டிருக்கிறாய். உனக்குச் சுற்ற வேண்டிய கபன் துணியை ஒருவர் நெய்து கொண்டிருக்கிறார். அது உனக்குத் தெரியுமா?

பொதுவாக உபகாரம் செய்பவனை நோக்கி மனம் சாய்ந்து விடுமாம். எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது...இவ்வளவெல்லாம் உதவி ஒத்தாசைகள் செய்கின்ற அல்லாஹ்வை நோக்கி உன் மனம் ஏன் சாய்வதில்லை?

சொர்க்கம் வேண்டுமென துஆ கேட்பவனே. உன்னுடைய தந்தை ஆதம் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் ஒரு பாவம் செய்ததற்காக அல்லாஹ் அவர்களை சொர்க்கத்திலிருந்து வெளியேற்றினான். நீ இவ்வளவு பாவங்கள் செய்துவிட்டு சுவனம் நுழைய வேண்டுமென ஆசைப்படுகிறாயே அது எப்படி?

**(இப்னு ஜவ்ஸி (ரஹ்)**

# பெருமானாரைக் கனவில் காண...

ஒருவரின் மீது பிரியம் கொண்டுள்ளவர் அவரை அடிக்கடி பார்த்துக் கொண்டிருக்கவேண்டும் என்றே விரும்புவார். நேசரின் முகத்தைப் பார்ப்பதே அவரின் கவலைகள் அனைத்தையும் போக்கி மனதை மகிழ்ச்சியால் நிரப்பி விடும். அவரோடு உரையாடுவது எல்லையில்லா இன்பத்திற்கு அவரை அழைத்துச் செல்லும்.

பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வஃபாத்திற்குப் பின் அன்னாரை நேரில் பார்க்கும் பாக்கியம் இல்லாவிட்டாலும் அன்னாரின் மீது ஆழிய நேசம் கொண்டு அவர்களின் திருமுகத்தைப் பார்க்காமலேயே அந்த நேசத்தில் திளைத்துக் கொண்டிருக்கும் உண்மைக் காதலர்களான முஃமின்களுக்கு அண்ணலாரை கனவில் தரிசிக்கும் அருட்பேறை அல்லாஹ் வழங்கியிருக்கிறான். .

பெருமானார் மீது யார் எந்தளவு நேசம் கொண்டிருக்கிறார்களோ அந்தளவுக்கு அன்னாரை கனவில் காணும் பாக்கியத்தைப் பெறுவார்கள்.

**பெருமானாரை கனவில் காண்பது பற்றிய ஹதீஸ்களும் அதன் விளக்கமும்**

பெருமானாரை கனவில் காண்பது பற்றி புஹாரி, முஸ்லிம் என்னும் இருபெரும் ஹதீஸ் கிரந்தங்களிலும் கீழ்க்காணும் ஹதீஸ் இடம் பெறுகிறது.

مَنْ رَآنِيْ فِى الْمَنَامِ فَسَيَرَانِيْ فِى الْيَقْظَةِ وَلاَيَتَمَثَّلُ الشَّيْطَانُ بِيْ

கனவில் என்னை யார் காண்கிறாரோ அவர் விழிப்பிலும் என்னைக் காண்பார். (ஏனெனில்) ஷைத்தான் என் உருவத்தில் காட்சியளிக்க மாட்டான்.

நூற்கள்:புஹாரி (6993) முஸ்லிம் பிஷரஹின்னவவி - பா 15 பக் 24

புஹாரி ஷரீஃபில் வந்துள்ள ஒரு ஹதீஸில்,

مَنْ رَآنِيْ فَقَدْ رَأَى الْحَقَّ فَاِنَّ الشَّيْطَانَ لاَيَتَكَوَّنُنِيْ

கனவில் என்னை யார் கண்டாரோ நிச்சயமாக அவர் என்னையே கண்டார். ஷைத்தான் என் உருவத்தில் காட்சியளிக்க மாட்டான் என்று கூறப்பட்டுள்ளது.

அறிவிப்பவர் : அனஸ் (ரலி) நூல் : புஹாரி (6994)

மேற்கூறப்பட்ட இரு ஹதீஸ்களல்லாதுவேறு சில ஹதீஸ்களிலும் பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தங்களை கனவில் காண்பது சாத்தியமான ஒன்றுதான் என்பதைத் தெரியப்படுத்தியுள்ளார்கள். அவர்களுடைய தோற்றத்தில் ஷைத்தான் வர முடியாது. ஏனெனில் நபித்துவத்தின் விசேச தன்மைகள் அவர்களைப் போல் தோற்றமெடுப்பதை விட்டும் ஷைத்தானைத் தடுத்து விடுகின்றன.

புஹாரி ஷரீஃபின் விளக்கவுரையான ஃபத்ஹுல் பாரியில் ஹாஃபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

இந்த ஹதீஸின் சரியான விளக்கமென்னவெனில், அனைத்து நிலைகளிலும் நபியவர்களைப் பார்க்கமுடியுமென்பதே. இது தவறானதாகவோ, குழப்பமான கனவாகவோ இருக்காது. மாறாக முழுக்க உண்மையான கனவாகும். மேலும் நபியவர்களின் தோற்றம் அல்லாத வேறு தோற்றத்தில் ஒருவர் அவர்களைப் பார்த்தாலும் அதை ஷைத்தானின் மூலம் ஏற்பட்ட கனவு என்று கூற முடியாது. மாறாக அதுவும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து ஏற்பட்ட கனவு தான்.

காழி அபூபக்கர் இப்னு தய்யிப் (ரஹ்) அவர்களும் வேறு சிலரும் இவ்வாறு தான் கூறியுள்ளனர். மேலும், "அவர் என்னையே கண்டார்" என்ற நபியவர்களின் திருவாக்கும் இதை உறுதிப்படுத்துகிறது.

அதாவது எதைப் பார்க்க வேண்டுமென்று (அல்லாஹ்வின் மூலம்) நாடப்பட்டதோ அதைத்தான் அவர் பார்த்தார். அக்கனவு குழப்பம் ஏதுமின்றி தெளிவாக இருந்தால் நல்லது. தெளிவாக இல்லையெனில் அப்போது அதன் விளக்கத்தை அறிய முற்பட வேண்டும். அதை அப்படியே விட்டு விடக் கூடாது. ஏனெனில் அது ஒரு நலவை அறிவிக்கும் கனவாகவோ, அல்லது உலகத்திலோ, மறுமையிலோ அவருக்கு நிகழ இருக்கும் ஏதேனுமொரு விஷயத்தைப் பற்றி அவருக்கு உணர்த்தும் கனவாகவோ இருக்கலாம்.

இப்னு பத்தால் (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்

"விழிப்பிலும் என்னை அவர் பார்ப்பார்" என்ற நபியவர்களின் சொல்லுக்குரிய பொருள் என்னவெனில் உலகில் விழிப்பு நிலையிலும் நபியவர்களை அவர் காண்பார் என்பதாகும். மாறாக மறுமை நாளில் விழிப்பு நிலையில் பார்ப்பார் என்பது இதன் அர்த்தமல்ல. ஏனெனில் நபியவர்களை கனவில் பார்த்த, பார்க்காத உம்மத்தினர் அனைவரும் மறுமை நாளில் அவர்களை பார்ப்பார்கள்.

நூல் : ஃபத்ஹுல் பாரி 12 பக் 401.

# அண்ணலைப் போற்றும் அண்ணா!

அறிஞர் அண்ணாவின் உரையிலிருந்து....

**ஒன்றே குலம்; ஒருவனே தேவன்.**

தத்துவக்காட்டிலே சிக்கித் தடுமாறிக் கொண்டிருக்கும் உலகுக்குத் தக்கதோர் வழிகாட்டும் ஒளிவிளக்காக இஸ்லாத்தை நாங்கள் கருதுகிறோம். மதம் என்று சாதாரணமாக உணரப்படுவதைப் போன்றதல்ல இஸ்லாமிய மதம். எனவே இஸ்லாத்திலுள்ள மேலோர் இஸ்லாத்தை மதம் என்று அழைப்பதைவிட மார்க்கம் என்றே அழைக்கின்றனர். இஸ்லாத்திலுள்ள ஒளியும் அந்த ஒளியிலுள்ள மாண்பும் வரவேற்கத்தக்கது. மனித சிந்தனை வளர்ச்சியுறாத காலத்திலே மனிதர்களுக்கு ஏற்பட்ட ஐயப்பாடுகளை நீக்கவே தூதர்கள் தோன்றினார்கள். நபிகள் நாயகம் இறுதி நபியாகத் தோன்றியதால் அவர்களுக்குப் பின்னரும் பலர் நானும் நபிதான் என்று சொல்லி மக்களிடையே குழப்பத்தை உண்டுபண்ண முடியவில்லை.

ஆண்டவன் மனிதனுக்குச் சிந்தனையை அருளியதே அவனுடைய தன்மையை அறிந்துகொள்ளத்தான். இஸ்லாத்திலே இறைவனுக்கு இணை வைக்கக்கூடாது என்று கூறப்பட்டிருப்பதை நினைத்து மகிழ்ந்திருக்கிறேன். ஏனெனில் ஆண்டவனுக்கு ஒன்றை இணை வைப்பது என்றால் அதைப்பற்றி முன்னரே அறிந்திருக்கவேண்டும். ஆண்டவனுக்கு இணைவைப்பதால்தான் அவனைக்காட்ட எட்டணா தரகு வேலையும் ஆரம்பமாகிறது. இஸ்லாமிய மார்க்கம் மனிதனைப் பூரண மனிதனாக்கத்தக்க மார்க்கமாய் விளங்குகிறது.

ஆண்டவன் தானாகத் தோன்றி உபதேசிக்காமல் தூதர்களை அனுப்பியதேன் என்றால் மனிதர்களுக்கு வெறும் நம்பிக்கையையூட்டுவதற்கு மட்டுமில்லாமல் அவர்களுடைய ஐயங்களைத் தெளிவாக்கி அவர்கள் பின்பற்றுவதற்கு வழிகாட்டிகளாகவே அனுப்பியிருக்கிறான்.

இஸ்லாமிய மார்க்கம் கூறும் ஆண்டவன்தான். உருவத்துக்குள்ளே தன்னை அடக்கிக் கொள்ளாதவனாக ஆண்டவனாக இருக்கிறான். அந்த ஆண்டவனும் சிந்தித்து உணரத் தூண்டுகிறான்.

இஸ்லாத்தின் மிச்சிறந்த மாண்பு அதன் சமுதாய அமைப்பாகும். சாதிப் பீடையை அது ஒழித்துக் கட்டுவதாகும்.

முதுகுளத்தூரிலே இன்று அடித்துக் கொண்டிருக்கும் ஹரிஜனும் தேவரும் அப்துல் சத்தாராகவோ அப்துல் சமதாகவோ மாறிவிட்டால் இந்த வேற்றுமைகள் எல்லாம் மறைந்து விடுகின்றன.

இம்மாதிரியான கூட்டங்களிலே இஸ்லாமிய வரலாறு அறிந்தோர் வாயிலாக நபிகள் நாயகத்தின் வீர வரலாற்றைக் கேட்க விரும்புகிறேன்.

எங்களைப் போன்றோரைப் பேசச் செய்து இஸ்லாத்தைப் பற்றிய எங்கள் ஞானத்தைச் சோதிப்பதைவிட எங்களைப் போன்றோரைக் கூட்டிவைத்து இஸ்லாமியத் தத்துவ விளக்கம் செய்யப்பட வேண்டும் என விரும்புகிறேன்.

காட்டு மிராண்டிக் காலமான அக்காலத்தில் 1400 ஆண்டுகளுக்கு முன்னே நபிகள் நாயகம் அவர்கள் தன்னந்தனியாக அக்காலத்து மக்கள் வணங்கிய தெய்வங்கள் பொய்யானவை என்றும் அவர்கள் சென்று வழிபட்ட கோவில், உண்மையான உறைவிடமல்ல என்றும் எடுத்துக் கூறித் திருத்தினார்கள் என்றால் அதற்காகவாவது சுயமரியாதைக்காரர்கள் அவரை மகான் என்று கொண்டாடுவார்கள்.

அக்கால மக்கள் ஈடுபட்டிருந்த கோட்பாடுகளையெல்லாம் இடித்துரைக்க எவ்வளவோ நெஞ்சுரம் வேண்டும். நபிகள் நபிகள் நாயகத்தின் நெஞ்சுரம் இறுதிவரையில் கொஞ்சமும் மாறாததாக இருந்தது. அது மாத்திரமல்ல, அந்த நெஞ்சுரத்தை இஸ்லாமியருடைய பரம்பரைச் சொத்தாக அவர்கள் விட்டுச் சென்றுள்ளார்கள். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நெறி தமிழ் நாட்டில் பரவியிருந்தது.

ஆனால் பாதகர்களாலும் காதகர்களாலும் அந்த நெறி மறைக்கப்பட்டிருந்த நேரத்தில் இஸ்லாம் அந்த நெறியை எடுத்துரைத்தது. எனவே காணாமல் போன குழந்தையைத் தாய்ப்பாசத்துடன் கட்டியணைப்பதைப் போன்றே தமிழகத்தில் இஸ்லாமியக் கருத்துகள் தழுவப்பட்டன. இதைக்கண்டு மற்றவர்கள் பொறாமைப்பட்டால் நாங்கள் என்ன செய்ய முடியும்? மார்க்கத்தைப் பயன்படுத்துவதைப் பொறுத்து அதன் மாண்பும் உணரப்படுகிறது.

இஸ்லாம் சிறந்த மார்க்கம். அது உலகத்தில் அக்கிரமத்தையும் அநியாயத்தையும் அடக்கப் பாடுபட வேண்டும். மேலே இருப்பவர்கள் கீழே இருப்பவர்களுக்கு உபதேசிப்பதாக மார்க்கம் இருந்து வருகிறது. கீழே இருப்பவர்களால் மேலே உள்ளவர்களுக்கும் உபதேசிப்பதாக மார்க்கம் இருக்க வேண்டும். பிறரிடமிருந்து பணம் பறிக்கவோ பேரம் பேசிப் பயனடையவோ அன்றி அக்கிரமத்தை ஒழிக்க மக்களிடையே அன்பை வளர்க்க மார்க்கம் பயன்பட வேண்டும். எங்களை நாஸ்திகர்கள் எனக் குற்றஞ்சாற்றுகின்றனர். ஆனால் உருவமற்ற ஒரு தெய்வத்தை நாங்கள் என்றும் மறந்ததில்லை. ஆஸ்திகர்கள் எனத் தம்மைத்தானே அழைத்துக் கொள்வோர் தங்களுக்குப் பிடிக்காதவர்களுக்குச் சூட்டிய பட்டம்தான் நாஸ்திகர்கள் என்பது. உண்மையிலேயே உலகத்தில்

நாஸ்திகர்கள் என ஒரு கூட்டத்தார் இருந்ததில்லை. அப்படி ஒருவேளை இருந்தாலும் நிச்சயமாக நாங்கள் அந்தக் கூட்டத்தைச் சார்ந்தவர்களல்ல. ஆண்டவனை ஐயப்படும் அளவுக்கு ஈனப்பிறவிகளாக அந்த ஆண்டவனால் படைக்கப்பட்டவர் களல்ல நாங்கள் என்பதைத் தெளிவு படுத்துகிறேன்.

**அறப்பணி**

என்னுடைய பொதுவாழ்வில் மதங்களின் ஆராய்ச்சியிலும் அவற்றிலுள்ள குறை நிறைகளை ஓரளவு ஆராய்ச்சியில் கவனம் ஏற்பட்டதே சந்தர்ப்பத்தின் சந்திப்புகளால் சமைந்தததுதான். என்னுடைய பொதுவாழ்வின் தொடக்க காலத்தில் நான் மேடையைத் தேடிப் பிடிக்கவேண்டியவனாக இருந்தேன். வலியவரும் அழைப்பெல்லாம் பொதுவாக மதாச்சார மேடைகளாகவே இருந்தது. சில சமயம் அம்மாதிரி மேடைகளில் நிர்ப்பந்தத்துக்காகக் கூட ஏறுவதுண்டு. சிலநேரம் அதிலுள்ள குறைநிறைகளைக் கூறவும் ஏறுவதுண்டு. இந்த சந்தர்ப்பம் என்னை மத ஆராச்சியில் வலியவே தள்ளிவிட்டது. ஒன்றினை அறிய, அதில் எழும் ஐயங்களுக்காக மற்றொன்றைத் தேடிப்பிடித்துப் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டு–படிப்படியாக அம்மதங்களின் முக்கிய நூல்களைப் படித்து முடித்துவிடும் நிலைக்கே கொண்டுவந்து விட்டது. எனக்கும் இஸ்லாத்துக்கும ஏற்பட்ட பிணைப்பு இந்த வகைளில் ஏற்பட்ட பிணைப்பல்ல.

நான் வசிக்கும் காஞ்சிபுரம் ஒலி முஹம்மது பேட்டை இஸ்லாமிய நண்பர்களுடனும் மார்க்கப் பேரறிஞர்களான ஆலிம்களும் என் இளமை முதல் உற்ற நண்பர்கள் என்கிற போது, குடும்பத்தோடு குடும்பமாய்க் கலந்து சகோதர வாழ்க்கை நடத்தியவன் நான். இஸ்லாத்தைப் பற்றியும் அதன் இன்னிலக்கியமான இறை மறை திருக்குர்ஆனைப் பற்றியும் நான் அறிந்து கொள்ளும் வாய்ப்பு என் இளமைக் காலத்திலேயே என் இதயத்தில் இடம் பிடித்துவிட்டது. திருக்குறளை நான் தெரிந்துகொண்ட காலத்திலேயே திருக்குர்ஆனையும் நான் தெரிந்துகொள்ளும் வாய்ப்புப் பெற்றிருந்தேன் என்று நான் துணிந்து சொல்வதில் பெருமை கொள்கிறேன்.

என்டைய பொதுவாழ்வு சுடர்விட என்னுடைய இதயமூச்சின் இலட்சிய மேடையான திராவிடக் கழக மேடையுடன் நபிகள் நாயக மீலாது மேடையும் எனக்குக் கைகொடுத்ததை நான் மறந்துவிட முடியாது. ஏறத்தாழ முன்னூற்றுக்கதிகமான மீலாது மேடைகளில் நான் பேசியிருக்கிறேன். நானும் என் கொள்கையும் சொல்லிவந்த சமுதாய சீர்திருத்தப் பிரச்சார பலத்துக்கு பெருமான் நபிகள் நாயகத்தின் ஏக தெய்வக் கொள்கை எங்கட்குப் பெரிதும் பிரச்சாரத் துணை நின்றது. கல்லையும் மண்ணையும் பூசிக்காதீர். கடவுளால் படைக்கப்பட்ட மனிதன் உண்டு

மனிதனால் படைக்கப்பட்ட கடவுள் இல்லை என்று நபிகள் நாயகம் வலியுறுத்திய அதே கொள்கையைக் கொண்டிருந்த எங்கள் இலட்சியப்பணி மீலாது மேடையின் மூலம் சுடர்விட நல்வாய்ப்பு இருந்தது.

ஏக தெய்வக் கொள்கையை ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்னும் உண்மைத் தாத்பரியத்தை மக்களை ஏற்கச் செய்ய எவ்வளவோ பிரச்சாரம் தொடுத்தும் முழுப்பயனும் எட்ட முடியாமல் மனம் வெதும்பும் நம்முடைய பிரச்சாரத்தையும் 1400 ஆண்டுகளுக்கு முன்பு எந்த வித நவயுக பிரச்சார சாதனமும் இல்லாத அந்த நாட்களில் திரும்பும் திசைதோறும் கடவுளின் சிலை வடித்து தினமொரு இறைவனை உண்டு செய்த அறிவாற்றலற்ற அந்த மக்களை – நபிகள் நாயகத்தின் 23 வருட பிரச்சார பலம் எத்துணை வெற்றிக்கு இழுத்து வந்தது. ஒரே இறை, ஒரே மறை என்ற கருத்தை உள்ளத்தால் ஒத்துக்கொள்ளச் செய்து, அதுவும் உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவி, பண்புடன் வாழச் செய்திருக்கிறது என்றால், அந்த மனிதப் புனிதரின் நாவன்மைக்கிருந்த நல்ல மதிப்பீட்டை, மகத்துவத்தை எண்ணிப் பூரித்து நன்னயத்திற்குத் துணைபோக வேண்டியவர் களாக இருக்கிறோம்.

இத்துணை மகத்துவம் அந்த மாநபிக்கு இருக்கக் காரணமே, அந்தப் பெருமகன் தன் உயிரினும் மேலாகக் கட்டிக்காத்த பொறுமையும்,சொல்லும் செயலும் இணைந்த வாழ்வும், நடைமுறை வாழ்க்கையில் தடையின்றிச் செல்லத் துணைநின்ற சட்டமும், தன்னையும் தன்னைப் பின்பற்றுவோருள் ஒருவராகிச் சொன்னதோடல்லாமல் செய்து காட்டும் செம்மலாகவே இருந்ததும் மூல முதல் காரணமாகும். மற்றெல்லா மதங்களிடையே இல்லாதிருக்கும் இணையற்ற மதிப்பு, அதன் சட்ட திட்டங்கள் மனிதனின் நடைமுறை வாழ்க்கைக் கேற்ற நல் அமைப்பாகும். *(தொடரும்)*

---

**தமிழ்ப் புலவர்களில் எமக்கு மிகவும் பிடித்தவர் ஔவையார் தான்.**

சங்கைமிகு செய்கு நாயகம் அவர்கள், கலீபா ஆலிம் புலவர் 16.8. 23. அன்று இலங்கை சென்றபோது அருளியது.

**மதுரஸா நன்கொடை.**

திண்டுக்கல் **தளபதி** மர்ஹூம். அப்துல் காதிர் ஜைலானி அவர்களின் துணைவியார் மர்ஹூமா. **ஜைலானி அம்மாள்** அவர்களின் 10 ஆம் நாள் பாத்திஹாவை முன்னிட்டு சிறப்பு விருந்தளிக்க, அவர்களின் மகனார் அஹ்மது சலீம் ரூ.15000/-ம் நன்கொடை வழங்கினார். அல்லாஹ் நாட்டங்களை நிறைவேற்றுவானாக. ஆமீன்.

**4**

### சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின்

# 88 ஆவது புனித உதய தினவிழா

## சிறப்புச் சொற்பொழிவுகள்

***ஜனாப் J.முஹம்மது ஸதக்கத்துல்லாஹ் ஹக்கிய்யுல் காதிரிய்*** *அவர்கள் உரையை, விழாத் தலைவர் கலீபா. டாக்டர். S.A.அஷ்ரப் அலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள், மனமகிழ்வான மன்ற மாருதமாக இருந்தது எனப் பாராட்டி, அடுத்தாக, ஞானத்திற்கும் சட்டமுண்டு என்னும் தலைப்பில் உரையாற்ற மதுரை அட்வகேட் A.அக்பர் பாஷா M.A. B.L., ஹக்கிய்யுல் காதிரிய் அவர்களை அழைத்தார்கள்.*

*உரையாளர் மேடைக்கு வருவதற்குள், நிகழ்ச்சி நெறியாளர்* ***கலீபா. ஆலிம் புலவர். S. ஹுஸைன் முஹம்மது ஹக்கிய்யுல் காதிரிய்யுல் மன்பஈ அவர்கள்:***

*விழாத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல நம்மிடம் நமது வாப்பா நாயகமவர்களைப் பற்றிப் பேச விஷயங்கள் நிறைய இருக்கின்றன. ஆனால், நமக்கு நேரம் தான் போதியதாக இல்லை. எனவே, அடுத்துவரும் பேச்சாளர்கள் ஐந்து நிமிடங்களிலிருந்து 7 நிமிடங்களுக்குள் தங்களது உரையை நிறைவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஒவ்வொருவரிடமும் இந்த விழாவில் தாங்கள் பேச வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது, ஹள்ரத் ஜிப்ரஈல் அலைஹிஸ்ஸலாம் அவர்களிடம் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், தங்களுக்கு ஓதத் தெரியாது என்று கூறினார்களே, அதுபோலத்தான் தாங்கள் மேடையில் பேசத் தெரியாது, பேசிப்பழக்கமில்லை என்றுதான் சொல்கிறார்கள். ஆனால், மேடையேறிப் பேச ஆரம்பித்து விட்டால் எத்தனை அருமையான கருத்துகள் வருகின்றன என்பதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கின்றோம். அல்ஹம்துலில்லாஹ்.*

*இப்போது பேச்சாளர் தங்கள் உரையைத் தொடங்குவார்கள்.*

***ஞானத்திற்கும் சட்டமுண்டு எனும் தலைப்பில்..***

***மதுரை அட்வகேட் A.அக்பர் பாஷா M.A. B.L., ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள்:***

அஊது பில்லாஹி மினஷ் ஷைத்தானிர் ரஜீம். பிஸ்மில்லா ஹிர்ரஹ்மானிர் ரஹீம்.

நமது உயிரினும் மேலான ஷைகு நாயகம் குத்புஸ்ஸமான ஷம்ஸுல் வுஜூது ஜமாலிய்யா அஸ்ஸையிது கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகமவர்களின் 88ஆவது புனித உதய தினவிழாவில் பங்கேற்கும் வாய்ப்புக் கிடைத்தது நாம் பெற்ற பெரும்பாக்கியம். இந்தப் புனித உதய தின விழாவிற்கு முன்னிலை வகிக்கும் பெருமதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய திருக்குடும்பத்தார் அவர்களுக்கும், விழாவிற்குத் தலைமையேற்றுள்ள கண்ணியத்திற்குரிய கலீபா அவர்களுக்கும், ஏனைய கலீபாப் பெருமக்களுக்கும் இங்குக் கூடியிருக்கும் அனைத்து ஆத்தும சகோதரர்களுக்கும் மதுரஸா உஸ்தாதுமார்களுக்கும் மதுரஸா மாணவர்களுக்கும் அனைவருக்கும் எனது ஸலாத்தைத் தெரிவித்து எனது உரையை ஆரம்பம் செய்கின்றேன். அஸ்ஸலாமு அலைக்கும் வ ரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

எனக்கு முன் பேசிய திண்டுக்கல் ஸதக்கத்துல்லாஹ் அண்ணன் அவர்களைப் போன்று, நானும் இதுபோன்ற பெரிய விழாக்களில் பேசிய அனுபவம் பெறவில்லை. அதிலும் முதன்முதலாக நமது மதுரஸாவில் இவ்வாறு பேசும் பாக்கியம் கிடைத்துள்ளது. இத்தகைய வாய்ப்பை வழங்கிய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

எனக்கு வழங்கப்பட்ட தலைப்பு, ஆன்மிகச் சட்டங்கள் குறித்தது. இஸ்லாத்தில் ஷரீஅத் சட்டம் இருக்கிறது. அது, திருமணம், சொத்துரிமை உள்ளிட்ட நடைமுறை வாழ்க்கைக்குப் பொருந்தக்கூடியதாக உள்ளது. அதேமாதிரி ஆன்மிக வாழ்வுக்கும் சட்டங்கள் இருக்கின்றன. காலையில் எழுவது முதல் தொழுவது தொடர்ந்து வெளிப்படையான வழிமுறைகள் உள்ளது போன்று, அவற்றிற்கு உள்ரங்கமான சட்டங்களும் இருக்கின்றன.

ஒவ்வொரு முஸ்லிமுக்கும் ஐந்து கடமைகள் இருக்கின்றன. அவற்றை முறையாக நிறைவேற்ற சட்டங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. இன்னும், முரீதீன்களாகிய நமக்குக் கூடுதலாக 3 மூன்று கடமைகள் உள்ளன. அதாவது, நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் நாம் முரீதாகும்போது 4 கடமைகளை நமக்கு வழங்கியுள்ளார்கள். அவற்றில் ஒன்று, தொழுகை. அது ஷரீஅத் சட்டத்திலேயே வந்துவிடுவதால், மீதமுள்ள மூன்று கடமைகள் நமக்குக் கூடுதலான கடமைகளாக உள்ளன.

அந்தக் கடமைகளை நாம் விடாமல் தொடர்ந்து, சின்சியராக கடைப்பிடித்து வந்தாலே நமக்கு ஈருலக நன்மைகளும் அவையாகவே

நமக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும். நாம் தேடிப் போகவேண்டியதில்லை. நமது வாப்பா நாயகமவர்கள் அருளிய நான்கு கடமைகளையுமே நிறைவேற்ற அவற்றிற்குரிய சட்டங்கள் இருக்கின்றன.

நாம் 24 மணிநேரமும் நமது எல்லாச் சொற்களிலும், செயல்களிலும் வாப்பா நாயகமவர்களை நினைத்துக் கொண்டே இருக்கவேண்டும். அப்போது தாமாகவே வாப்பா நாயகமவர்களிடம் நமக்கு நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தும். அவ்வாறு இருந்தால், தனிப்பட்ட முறையில் நாம் எந்த துஆவும் கேட்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. நமக்குண்டான பாதுகாப்பும் பரக்கத்தும் ஆட்டோமேட்டிக்காக நமக்குக் கிடைத்துக் கொண்டே இருக்கும். உன்னிப்பாகக் கவனித்துப் பார்த்தால், கராமத்து மாதிரி நடந்து கொண்டே இருக்கும். வாப்பா நாயகமவர்களின் வார்த்தைகளைப் பின்பற்றி, நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் நமது எல்லாருடைய வாழ்விலும் அன்றாடம் இதுபோன்ற கராமாத்துகள் நடந்து கொண்டிருப்பதை நாம் அனுபவித்து வருகின்றோம். மிகப் பெரிய ஆபத்துகளிலிருந்தெல்லாம் இலேசான முறையில் பாதுகாக்கப்பட்டு வருகின்றோம்.

வாப்பா நாயகமவர்களின் திருக்கரம் பற்றியதிலிருந்து, எப்போதும் அவர்களது நினைவிலும்நெருக்கத்திலும் இருப்பதனால், அந்தப் பாதுகாப்பு உணர்வை நித்தம் நித்தம் அனுபவித்து வருகிறோம்.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களின் இந்திய விஜயத்தின்போது, திண்டுக்கலில் நடக்கும் மஜ்லிஸ்களில் ஆவலாகக் கலந்து கொள்வேன். அவ்வாறு ஒருநாள் ஸுபுஹு நேரத்திற்குப் பின் நடைபெறும் காலை மஜ்லிஸில் கலந்து கொள்வதற்காக, அதிகாலை 4 மணிக்கு எழுந்து தயாராகி, 6 மணிக்கெல்லாம் திண்டுக்கல் சென்று மஜ்லிஸில் கலந்து கொண்டேன். சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், முரீதுப் பிள்ளைகளுடன் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

மஜ்லிஸில் அவ்வாறு அமர்ந்திருக்கும்போது, எனக்குள் ஓர் எண்ணம் ஓடியது. அதாவது, நான் இன்னொரு ஷைகு ஒருவர் நடத்தும் ராத்திபு மஜ்லிஸிலும் கலந்து கொள்வேனே, அந்த ஷைகும் ஒரு நல்ல மனிதர்தானே. அவரும் நம்மிடம் பாசமாகத் தானே இருப்பார். அவரும் ஆன்மிகத்தைத் தானே போதிக்கிறார். எனவே, இவ்வாறு நாம் இரண்டு ஷைகுமார்களிடத்திலும் தொடர்பில் இருக்கிறோமே? இதில் ஒன்றும் தவறில்லையே. இரண்டு இடத்திற்கும் சென்றால், எக்ஸ்ட்ரா நன்மைகள் தானே கிடைக்கும்? என்று நினைத்துக் கொண்டிருந்தேன். நான் சொல்லும்

சம்பவம், சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தது. அவ்வாறு நான் நினைத்துக் கொண்டிருக்கும்போது, சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், இரண்டு குதிரையில் ஏறி சவாரி செய்தால் என்ன நடக்கும்? என்று கேட்டார்கள். எனது எண்ண ஓட்டத்தை அறிந்து, ஒரு வினாடி கூட வித்தியாசமின்றி, உடனே அதற்கான பதிலைப் பகிரங்கமாகத் தெரிவித்து அருளினார்கள்.

இதெல்லாம் வாப்பா நாயகமவர்கள் சொன்னதைக் கேட்டு, அப்படியே நடந்து ஆன்மிக உறவை வலுப்படுத்திக் கொள்பவர்களுக்கு, இதுமாதிரி எப்போதும் அற்புதங்களை நிகழ்த்திக் காட்டிக் கொண்டே இருப்பார்கள்.

ஒருமுறை நான் பைக்கில் செல்லும்போது சறுக்கிக் கீழே விழுந்து விட்டேன். அது எப்போதும் போக்குவரத்து நெரிசலாகவே இருக்கும் சாலை. வண்டி எடுக்கும்போதும் எந்த ஒரு செயலையும் செய்யும் போதும் வாப்பா நாயகமவர்களையே நினைத்துக் கொண்டே இருப்பதால், அந்த நேரத்தில் நாயகமவர்களின் பாதுகாப்புக் கிட்டியது. இல்லையென்றால், எனக்குப் பின்னாடி வந்த பொலிரோ வாகனம் என்மீது ஏறி இறங்கி இருக்கும். நாயகமவர்கள் தான் அந்த ஆபத்திலிருந்து காப்பாற்றி அருளினார்கள்.

இதுபோன்று நமது வாப்பா நாயகமவர்களின் அற்புதங்களைச் சொல்லிக் கொண்டே இருக்கலாம். விழாவில் பேச்சாளர்களுக்குரிய நேரம் குறைவாக இருப்பதாக, ஆலிம்புலவர் கலீபா அவர்கள் சொன்னார்கள். எனவே, ஒரேயொரு நிகழ்ச்சியை மட்டும் கூறி எனது உரையை நிறைவு செய்து கொள்கின்றேன்.

ஒருமுறை சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களிடம் உத்தரவு பெற்றுக் கொண்டு, நான், எனது மனைவி மற்றும் தாயாருடன் உம்ராவிற்கு சென்றோம். உம்ராவில் 14 நாட்கள் இருந்தோம். அவற்றில் முதல் 7 நாட்கள் நல்லபடியாகச் சென்று கொண்டிருந்தன. அதன்பின், தண்ணீர் மாறி மாறிக் குடித்தது, ஐஸ் வாட்டர், ஜூஸ் குடித்தது என்று அதிகமான சளி பிடித்து, காய்ச்சல் அடிக்கிறது, வயிற்றுக் குழப்பம் ஏற்பட்டு, சாப்பிட முடியவில்லை. தூக்கமும் இல்லை... பயங்கர வேதனையாகி விட்டது. பனியன், சட்டை, சுவட்டர் அதற்கு மேல் கம்பளி போர்த்தியிருக்கிறேன். என்றாலும், குளிர் வாட்டியது. உடல் நடுங்கியது. அந்த ஆறுநாட்கள் மதீனாவில் இருக்கிறோம். மூன்று வேளையும் ஒரு ரொட்டிதான் சாப்பிட்டு, மாத்திரை போட்டுக் கொண்டிருந்தேன். ஒருகட்டத்தில், உடல் மிகவும் பலவீனமாகிவிட்டது. உயிர்போய்விடுமோ என்றளவுக்கு சூழ்நிலை வந்துவிட்டது. இதோடு நமக்கு நேரம் முடிந்துவிட்டது என்று நினைக்குமளவு வந்துவிட்டது.

இவ்வளவு நடந்தும் எனது மனைவிக்கும் தாயாருக்கு இதெல்லாம் தெரியாத மாதிரி பார்த்துக் கொண்டேன். வாப்பா நாயகமவர்களின் கிருபையைக் கொண்டு, அவர்களை அங்கே தேவையான இடங்களுக்கு அழைத்துச் செல்வது உள்ளிட்ட அனைத்துப் பணிகளையும் பார்த்துக் கொண்டே எனக்குள்ளேயே இந்த வேதனைகளை அனுபவித்து வந்தேன். ஆறு நாட்களாக இரவிலும் பகலிலும் சரியான தூக்கமே இல்லை. இப்படியே போனால், மனநிலையும் பாதிக்கப்பட்டுவிடுமே என்று அச்சமும் ஏற்பட்டது. நாங்கள் தங்கியிருந்த அறையின் ஏ.சி.யை நிறுத்தச் சொல்லி, லாட்ஜ் பணியாளர்களிடம் தெரிவித்தேன். அவர்களும் மெக்கானிக்கை அழைத்து, எங்களது அறையின் ஏ.சி.யை மட்டும் நிறுத்த முயற்சித்தார்கள். அதுவும் முடியவில்லை.

அந்த நிலையில், நமது வாப்பா நாயகமவர்களிடம் உள்ளம் உருகி, எனது சூழ்நிலையைக் கூறி பாதுகாவல் தேடி துஆ கேட்டேன். என்ன ஆச்சரியம்.... நான் கேட்ட அதே வினாடி, உடனடியாக எனது உடல் முழுக்க வியர்த்து விட்டது. கம்பளியை நீக்குகிறேன். இன்னும் வியர்க்கிறது. பிறகு, சுவட்டரை கழற்றினேன். அப்போது வியர்க்கிறது. சட்டை, பனியனையும் கழற்றிய பின், சுகந்தமான காற்று வீசும் சுவனத்தில் இருப்பதுபோல் உணர்ந்தேன். பாருங்கள், வேண்டிக் கொண்ட அந்த நொடியிலேயே நோயைத் தூர எறிந்து, ஷிஃபா தந்தார்கள். இந்த விஷயத்தை வாப்பா நாயகமவர்களிடம் தெரிவித்தபோது, தங்களுக்கே உரிய சிரிப்பினைப் பரிசாக வழங்கினார்கள். அவர்களுக்குத் தெரியாததா? அவர்களே தானே பாதுகாவல் தருகிறார்கள். எந்த ஒரு விஷயத்திலும் பிரச்சனையிலும் கடைசி தருணத்தில் இருந்தாலும் வாப்பா நாயகமவர்களை நினைத்தால், உடனே அதற்குரிய தீர்வு கிடைத்துவிடும் என்பது இதுமாதிரியான நிகழ்வுகள் மூலம் நாம் அனுபவித்து வருகின்றோம்.

இஸ்லாத்தின் கடமைகளோடு, வாப்பா நாயகமவர்கள் நமக்கு அருளிய கூடுதலான 3 கடமைகளான, தினந்தோறும் திருக்குர்ஆன் ஷரீஃப் ஓதுதல், மாதந்தோறும் புனித ராத்திபு ஷரீஃப் மஜ்லிஸில் பங்கேற்றல், மாதாந்திர ஞான விளக்கக் கூட்டத்தில் பங்கேற்றல் ஆகியவற்றை முறையோடு ஒழுங்குப் பிரகாரம் செய்து வந்தாலே, நாம் ஈருலக நன்மைகளையெல்லாம் அடைந்து கொள்ளலாம் என்று கூறி, எனக்கு வாய்ப்பளித்த நல்லுள்ளத்தார் அனைவருக்கும் நன்றி தெரிவித்து, எனது சிற்றுரையை நிறைவு செய்து கொள்கிறேன்.

வஸ்ஸலாம்.

**மதுரை அட்வகேட் A.அக்பர் பாஷா M.A. B.L., ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களின் உரையைத் தொடர்ந்து, நிகழ்ச்சி நெறியாளர் கலீபா. ஆலிம் புலவர் அவர்கள், **மதுக்கூர் இசைக்குயில், ஞானக்குயில் ஜனாப். அஹ்மது கபீர் ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களை, ஆன்மிகப் பாடலொன்றைப் பாட வருமாறு அழைத்தார்கள்.

வான்மறையே, வான்மறையே, வளம் தருவீர் எங்கள் வாழ்வினிலே... எனும் ஞான கீதத்தை மதுக்கூர் ஜனாப். அஹ்மது கபீர் ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் பாடி, பரவசப்படுத்தினார்கள்.

**விழாத்தலைவர் கலீபா டாக்டர் S.A.அஷ்ரப் அலி ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் :** பாடகர் நம் அனைவருக்கும் மிக்க பரிச்சயமானவர். இந்த ஞான கீதத்தை உதட்டிலிருந்து பாடவில்லை. உள்ளத்திலிருந்து பாடியிருக்கிறது. அது தான் நம் எல்லாரது உள்ளங்களிலும் தாவி நிற்கின்றது.

அடுத்து வரக்கூடிய பேச்சாளர்.... அவரை எப்படி அறிமுகப்படுத்தி அழைப்பது என்று எனக்குத் தெரியவில்லை. நமது சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்களை இந்தியாவில் முதன்முதலில் சந்தித்தவர்கள், அதிக பார்த்தவர்கள், முஹிப்பு, ஆஷிக், ஆரிஃப், கலீபா, இதற்கெல்லாம் மேல் தியாகி.... யாரை இவ்வாறெல்லாம் அறிமுகப்படுத்துகிறேன் உங்கள் அனைவருக்கும் இப்போது தெரிந்திருக்கும். நமது அன்பிற்குரிய அண்ணன் **தியாகி. கலீபா. M. சிராஜுத்தீன் B.Sc., ஹக்கிய்யுல் காதிரிய்** அவர்களைப் பேசுவதற்கு அழைக்கின்றேன்.

பேச்சாளர் மேடைக்கு வருவதற்குள்... **நிகழ்ச்சி நெறியாளர் கலீபா. ஆலிம் புலவர் அவர்கள் :** குரு உனக்குக் கிடைப்பதற்குக் கொடுத்து வைக்க வேண்டும். ஒரு குரு கிடைத்தபோதும் அவர் கரம் கொடுக்க வேண்டும். கரம் கொடுத்தபோதும், நெஞ்சில் இடம் கொடுக்க வேண்டும். கொஞ்சம் இடம் பிடித்த நீ அவரில் இழந்திருக்க வேண்டும்.... என்ற இந்த வரிகளுக்கு இலக்கணமாக விளங்கும் **தியாகி. கலீபா. M. சிராஜுத்தீன் B.Sc., ஹக்கிய்யுல் காதிரிய்** அண்ணன் அவர்கள் தங்களது உரையைத் தொடங்குகிறார்கள் என்றார்கள்.

**திருச்சி தியாகி. கலீபா. M. சிராஜுத்தீன் B.Sc., ஹக்கிய்யுல் காதிரிய் அவர்கள் :**

நமது உயிரினும் மேலான குருநாதர் அவர்களின் பிறந்ததின விழாவில் பங்கேற்க உங்கள் அனைவருக்கும் கலீபாப் பெருமக்களுக்கும் தலைவர் அவர்களுக்கும் எனது பணிவன்பான ஸலாத்தினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்... அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மத்துல்லாஹி வ பரக்காத்துஹு.

வாப்பா நாயகமவர்களைப் பற்றிப் பேச வேண்டும் என்றால், ரொம்ப கஷ்டம். ஏனென்றால், அது 50 வருடங்கள் தொடர்பில் இருக்கும் விசயங்களைப் பேசும்போது நீண்டு கொண்டே இருக்கும். ஏற்கனவே அதிக நேரமும் ஆகிவிட்டது. பேசுவதற்குக் குறிப்பு வைத்துக் கொண்டு பேசும் சூழ்நிலையும் எனக்கு இல்லை. ஆகையால் ஒரு சில விசயங்களை மட்டும் கூறிவிட்டு விடைபெற்றுக் கொள்கின்றேன்.

வாப்பா நாயகமவர்களின் பிறந்த தினத்தை முன்னிட்டு, நேற்று வாப்பா நாயகமவர்களிடம் பேசக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. பேசினேன். வாப்பா நாயகமவர்கள் என்னிடம், நல்லா இருக்கின்றீர்களா? என்று கேட்டார்கள். அதற்கு நான் நன்றாக இருக்கிறேன் வாப்பா. ஆனால், ஒரு சிறு தங்கடம் வாப்பா... என்றேன். என்னது என்னது என்று கேட்டார்கள். எனக்கு யூரினரி இன்ஃபெக்ஷன் மாதிரி ஏற்பட்டுள்ளது என்றேன். உடனே, மாத்திரை சாப்பிட்டீர்களா? என்று கேட்டார்கள். இரண்டு நாட்களாக இந்தத் தங்கடம் உள்ளது வாப்பா, நாளைக்கு வாப்பா நாயகமவர்களின் பிறந்தநாள் விழா நடக்க உள்ளது வாப்பா. விழாவுக்குச் சென்று வரவேண்டும். அதற்குள் இந்தத் தங்கடம் சரியாகிவிட்டால் நன்றாக இருக்கும் வாப்பா, என்றேன். உடனே நாயகமவர்கள், அது சரியாப்போகும் சிராஜ். அதைப் பற்றி யோசிக்காதீர்கள் என்றருளினார்கள். அதற்கு நான், அது போதும் வாப்பா... அதுபோதும் வாப்பா என்று மனம் மகிழ்ந்தேன். சங்கைக்குரிய சைகு நாயகமவர்களின் திருவாய் மலர்ந்தருளி, நீங்க நல்லா இருப்பீர்கள் என்று சொல்லி விட்டால், போதாதா? எனவே, நான் அது போதும் வாப்பா! அது போதும் வாப்பா! என்று தெரிவித்தேன். அதன் பின்னர், மற்ற விசயங்களைப் பேசிவிட்டு, வாப்பா நாயகமவர்களிடம் உத்தரவு வாங்கிக் கொண்டு, போனை அணைத்தேன்.

இன்று காலை எழுந்தது முதல் எனக்கு எந்தத் தொந்தரவும் உடல் உபாதைகளும் இல்லாமல் மிகவும் நார்மலாக இருந்தது. வாப்பா நாயகமவர்களின் அருள்வாக்கு அப்படியே நடந்தேறியது மனதுக்கு பெரிய சந்தோசமாக இருந்தது.

சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள் இன்னும் நீண்ட காலத்திற்கும் சீவியத்தோடு இருந்து நமக்கும், நமது குடும்பத்தாருக்கும், அவர்களது குடும்பத்தினருக்கும் பாதுகாவலாய் இருக்க வேண்டும்.

நான், குடும்பத்தோடு அடிக்கடி ஜமாலிய்யா அப்பா நாயகமவர்களின் தர்காவிற்கு சென்று வருவது வழக்கம். அங்கு சென்று வருவது மிகுந்த இலகுவான பயணமாக இருக்கும். காலையில் சென்றுவிட்டு, மாலையில் வீடு

திரும்பிவிடலாம். அவ்வாறு ஒருநாள் நாங்கள் எங்கள் குடும்பத்தோடு சம்பைப் பட்டினம் சென்றிருக்கும்போது, திடீரென்று போன் ஒன்று வந்தது. யாரென்று பார்த்தால், நமது சங்கைக்குரிய சைகு நாயகமவர்களிடமிருந்து போன் வந்திருந்தது. வாப்பா நாயகமவர்கள் அழைக்கிறார்களே என்று ஆச்சரியத்தோடு வாப்பா, வாப்பா நான் சிராஜ்தீன் பேசுகிறேன் என்றதும், நமது நாயகமவர்கள், அடடா சிராஜ்தீன், உங்களுக்கு போன் செய்து விட்டோமா? நான் இன்னொருவருக்கு அழைக்க நினைத்து உங்களுக்கு அழைத்துவிட்டேன் என்றார்கள். பரவாயில்லை வாப்பா. நான் நமது அப்பா நாயகமவர்களின் தர்காவில் தான் இருக்கின்றேன் வாப்பா என்றேன். எங்கே இருக்கீங்க? என்று திரும்பக் கேட்டார்கள். நான் நமது அப்பா நாயகமவர்களின் தர்காவில்தான் இருக்கின்றேன் என்று மீண்டும் சொன்னேன். அப்படியா, சரி! சரி! வேண்டியதை வாரிக் கொண்டு வாருங்கள்... வேண்டியதை வாரிக் கொண்டு வாருங்கள்... என்றார்கள். அப்போது நான் சொன்னேன் : சரிங்க வாப்பா... வேண்டியதை வாங்கிக் கொண்டு கடைசியாக அப்பா நாயகமவர்களிடம் சண்டை ஒன்று போட்டுவிட்டு வரப்போகிறேன் என்றேன். அப்படியா? என்ன சண்டைபோடப் போறீங்களா? என்று கேட்டார்கள். அதற்கு நான், அப்பா நாயகமவர்களிடம் தங்களுக்குத் தேவை ஏதுமென்றால் என் ரப்பே! என் ரப்பே! தங்களது மூதாதையர்களிடம் கேட்டீர்களல்லவா? நாங்கள் எங்களது வாப்பா நாயகத்தின் சார்பாக, அன்னவர்களின் அப்பா நாயகமாகிய தங்களிடம் கேட்கிறோம். தங்கள் வீட்டிலிருந்து வந்துதித்த எங்கள் தர்பார் நாயகத்தின் வயதை, தங்களின் வயதைப் போன்று அதிகமான வயதை, ஆயுட்காலத்தை எங்கள் வாப்பா நாயகமவர்களுக்கும் கொடுத்தாக வேண்டும் என்று கேட்கப் போகிறேன் என்றேன். உடனே வாப்பா நாயகமவர்கள், சிரித்துக்கொண்டே கேளுங்க! கேளுங்க! சண்டை போட்டுவிட்டு வாங்க... என்று அருளினார்கள்.

பின்னர், ஜியாரத்தை முடித்துக்கொண்டு, எங்கள் பிரார்த்தனைகளை சங்கைக்குரிய சம்பை அப்பா நாயகமவர்களின் சன்னிதானத்தில் எத்திவைத்து விட்டு வீட்டுக்கு வந்தோம்.

இந்தச் சம்பவத்தைப் பின்னர் ஒருமுறை சங்கைக்குரிய சைகு நாயகவமர்களிடம் சொல்லிக் காண்பித்தேன். கேட்டுச் சிரித்துக் கொண்ட சங்கைக்குரிய ஷைகு நாயகமவர்கள், சிராஜ்... எங்கள் பிள்ளைகளுடைய ஹாஜத் அதுதான் என்று இருக்குமேயானால், அல்லாஹ் எங்களுக்கு அப்படியே ஆக்கித் தரட்டும் என்றருளினார்கள் (ஆமீன்.. ஆமீன்.._யாரப்பல் ஆலமீன்).

ஆகவே, நமது வாப்பா நாயகமவர்கள், அப்பா நாயகமவர்களைப் போலவும் அவர்களை விட அதிகக் காலமும் நம்மோடு இருக்க வேண்டும். அதுவே அவர்களது குடும்பத்தாருக்கு மிக்க நல்லது நமக்கும் நமது குடும்பத்தாருக்கும் மிக்க நல்லதாகும்.

அடுத்ததாக, வாப்பா நாயகமவர்களைப் பற்றி ஒரே ஒருசெய்தியை மட்டும் கூறி நிறைவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

என்னவென்றால், இமாம் முஹிய்யுத்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களைப் பற்றி நாம் கேள்விப்பட்டிருப்போம். அவர்களைப் பற்றிச் சிலருக்குத் தெரியாமல் இருப்பதற்கும் வாய்ப்பிருக்கிறது. ஏனென்றால், அவர்களைப் பற்றிய செய்திகள் பயான்களில் கூறுவது மிக அரிதான ஒன்றாகும். இமாம் முஹிய்யுத்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், ஹாதிம்தாய் குடும்பத்திலிருந்து வந்தவர்கள். ஹாதிம் தாய் என்பார் எப்படிப்பட்டவர்கள் என்றால், வந்தவர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் வாரி வாரி வழங்கும்பேறு பெற்றவர்கள். பெரிய செல்வந்தர். கௌதுல் அஃலம் முஹிய்யுத்தீன் அப்துல் காதிர் ஜீலானி கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஜீஸ் அவர்களின் காலகட்டத்தில், அந்தப் பரம்பரையில் வந்த ஒருவருக்கு வாரிசில்லாமல் போய்விடுகிறது. எனவே, முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களை நாடி, நாயகமே! எங்கள் பரம்பரையில் தொன்றுதொட்டு, அனைவருக்கும் உதவி செய்து வந்தோம். எனக்கு வாரிசு இல்லை. எனவே, எங்கள் பரம்பரையில் காலம் காலமாகச் செய்து வந்த மக்கள் பணி பாதிக்கப்பட்டு விடும். அதனால் கவலையாக உள்ளது என்று முறையிட்டார்கள். இதைக் கேட்டு கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த கௌதுல் அஃலம் முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்கள், சரி... உங்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறக்கும். அந்தக்குழந்தை என்னைப் போன்றே இருக்கும். அதற்கு என்பெயரையே சூட்டுங்கள்... என்று பஷாரத் செய்கின்றார்கள். அதன்படியே ஆண் குழந்தை பிறக்கின்றது. அந்தக் குழந்தைக்கு முஹிய்யுத்தீன் ஆண்டகை (ரலி) அவர்களின் பெயரையே சூட்டுகின்றார்கள். அந்தக் குழந்தையை வளர்த்து வருகிறார்கள். அந்தக் குழந்தை தான், முஹிய்யுத்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள்.

அவர்கள் சிறப்பாக வளர்ந்த பின்னர் ஒருநாள் ஒரு கனவு காண்கின்றார்கள். அதாவது, அவர்கள் விண்மீன் கூட்டத்தைத் திருமணம் செய்வதாகக் கனவு காண்கிறார்கள். இவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. புரியாத புதிராக உள்ளதே என்று, கனவுக்கு விளக்கம் சொல்பவர்களை நாடி விளக்கம் தேடுகிறார்கள். அப்படி யொருவர், ஒரு பெண்ணோடு ஒருவருக்கு

கல்யாணம் ஆகுதென்று சொன்னால், அவளைப் பற்றி இரகசியங்கள் எல்லாம் அவருக்குத் தெரியவரும் என்பது போன்று, ஒவ்வொரு விண்மீன் பற்றிய இரகசியங்களும் உங்களுக்குத் தெரியவரும். அதாவது, வானுலகத்திலுள்ள, பிரபஞ்சத்திலுள்ள இரகசியங்கள் எல்லாம் தங்களுக்குத் தெரிய வரும் என்பதாக அவர்கள் விளக்கமளிக்கிறார்.

பின்னாளில், இத்தனை விஞ்ஞான வளர்ச்சிக் காலத்திற்கெல்லாம் முன்பாகவே அவர்கள் வான சாஸ்திரம் பற்றி ஏகப்பட்ட நூல்கள் எழுதியுள்ளார்கள். அவற்றையெல்லாம் நாம் கண்டதில்லை. அவர்கள் எழுதிய நூல்களில் மிகவும் பிரசித்திப் பெற்ற நூல்கள் புஸூஸுல் ஹிகம், இன்ஸானுல் காமில் போன்ற கிதாபுகள் ஆகும். அவற்றிலுள்ள விசயங்களை முழுவதுமாகப் பூரணமாக ஓதிப் படித்துத் தெரிந்து கொண்டவர்கள் மிகக் குறைவானவர்களே என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால், அந்த நூல்களில் அவ்வளவு அகமியமும், அவ்வளவு பொருள் பொதிந்தும் மறைவான ஞானமும் நிறைந்திருக்கும். இவற்றையெல்லாம் நமது வாப்பா நாயகமவர்கள் சொல்லித்தான் கேள்விப் பட்டிருக்கின்றேன். அந்த நூல்களை பெரிய வாப்பா நாயகமவர்களிடம் நமது வாப்பா நாயகமவர்கள் ஓதியிருக்கின்றார்கள்.

அந்த அளவுக்கு, மெய்ஞ்ஞானம் நிறைந்த நூல்கள் அவை. இமாம் முஹிய்யுத்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களும் ஞானத்தில் கரைகண்டவர்கள். நான் எதற்கு இத்தனை பீடிகை போடுகின்றேன் என்றால்,

நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் அருளியுள்ளார்கள் : இன்றைக்கு இமாம் முஹிய்யுத்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஹயாத்தோடு இருந்திருந்தால், எம்மிடத்துத் தேடிவந்து, எம் இல்லத்திற்கு வந்து எங்களுக்குச் சங்கை செய்வார்கள். அதாவது, நமது வாப்பா நாயகமவர்களின் மகோன்னத நிலையை இதன் மூலம் எடுத்துக் காட்டுகிறார்கள். இமாம் முஹிய்யுத்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், எதற்கு நமது வாப்பா நாயகமவர்களைத் தேடிவருகின்றார்கள் என்றால், அதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. ஒன்று, முஹிய்யுத்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் ஸய்யிதுஸ் ஸாதாத் இல்லை. ஹாதிம்தாய் குடும்பத்திலிருந்து வந்தவர்களாதலால் அவர்கள் ஸய்யிதுஸ் ஸாதாத் இல்லை. இன்னொன்று, நமது வாப்பா நாயகமவர்களின் அகமியமான இல்முடைய நிலை. சொல்லப்போனால், இமாம் முஹிய்யுத்தீன் இப்னு அறபி ரலியல்லாஹு அன்ஹு அவர்களே அகமியமான இல்மில் கரைகண்டவர்கள். அவர்கள்

நூல்களைப் படிப்பவர்களும் அந்தக் கருத்துகளை விளங்கிக் கொள்பவர்களும் மிக மிகக் குறைவு. அப்படிப்பட்ட சூழ்நிலையில், நமது அகமிய இல்மிற்காகவும், ஸய்யிதுஸ் ஸாதாத் என்பதற்காகவும் நம்மைத் தேடிவந்து சங்கை செய்வார்கள் என்று சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் அருளுகின்றார்கள் என்றால், நமது வாப்பா நாயகமவர்களின் மகோன்னதமான நிலையை நாம் நினைத்துப் பார்க்கக் கடமைப்பட்டுள்ளோம்.

ஆகவே தான் வாப்பா நாயகமவர்கள் கூறுகிறார்கள், உங்களில் யாராக இருந்தாலும் சரி, கலீபாவாக இருந்தாலும் சரி, நம்மைப் பரிபூரணமாகத் தெரிந்து கொள்ள யாராலும் முடியாது என்றருளுகிறார்கள். அழகான வார்த்தை. அருமையான வார்த்தை. பரிபூரணத்தை விளங்கிக் கொள்ளச் சாத்தியமில்லை. ஏனென்றால், நாமெல்லாம் பரிபூரணத்தின் சின்னஞ்சிறு அங்கம் தான். நாயகமவர்கள் பரிபூரணத்தின் பரிபூரணமாகத் திகழக்கூடியவர்கள். பரிபூரணத்தின் அங்கம், நாம் பரிபூரணத்தின் ஒரு பகுதியாக இருக்கிறோம் என்று ஓரளவுக்குத்தான் தெரிந்து கொள்ள முடியுமே தவிர, அந்தப் பரிபூரணத்தையே தெரிந்து கொள்வது என்பது சாத்தியமே இல்லை. ஆக, வாப்பா நாயகமவர்கள் பரிபூரணமானவர்கள். அவர்களை அறிந்து கொள்வது மிகக் கடினம். இருந்தாலும், அவர்களை நம்பி, அவர்கள் பரிபூரணமான தோன்றல் என்பதை நம்பி, அவர்களை நாம் பின்தொடர்ந்தாலே நமக்குப் போதும்.

நமது தந்தை நாயகம் யாஸீன் மௌலானா (ரலி) அவர்கள் அருளிய சின்ன வாரிதாத் ஒன்றைக் கூறி எனது உரையை நிறைவு செய்து கொள்கின்றேன். **யவாநிஉவில்** தான் இதை அருளியிருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். அதாவது, யார் எம்மைத் தன்னம்பிக்கையுடன் ஏறிட்டுப் பார்த்தானோ, அவனை வலீ என்று எழுதப்படும் என்று இரத்தினச் சுருக்கமாக பஷாரத் செய்துவிட்டார்கள். அதாவது, இவர்கள் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாரிசாக இருக்கிறார்கள், வலீயாக இருக்கிறார்கள் என்று தன்னம்பிக்கையோடு பயபக்தியோடு பார்த்தாலே போதும், பார்த்தவர் வலீயாகி விடுவார் என்று அருளுகிறார்கள். அப்படியிருக்கையில், மற்றவர்களின் நிலைகளை யெல்லாம் நினைத்துப் பாருங்கள். அந்த மாதிரி நிலையில் நம்மையெல்லாம் ஆளாக்கி வைத்துள்ளார்கள். அவ்லியாவாகவும் வலியாகவும் இந்த இபாதத் செய்தால் கிடைத்துவிடும், அந்த வணக்கம் செய்தால் கிடைத்துவிடும் என்றெல்லாம் நிச்சயமாக முடியாது. அந்தப் பதவிகள் அல்லாஹுதஆலாவே அருள்வதாகும். அத்தகைய நிலைகளை எவ்வளவு எளிமையாக, எவ்வளவு சுலபமாக நம் எல்லோருக்கும் அந்தப்பாக்கியத்தை வாப்பா நாயகமவர்கள் கொடுத்திருக்கிறார்கள் என்று

*நினைத்துப் பார்க்கும்போது, தக்கலை பீர் அப்பா (ரஹ்) அவர்கள் கூறியதுபோல, தலை கீழாகவும், கால் மேலாகவும் பத்து நூறு ஆண்டுகள் நன்றி தெரிவித்தாலும் ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் உம்மத்தாகப் பிறந்ததற்கே, நன்றிக்கடன் செலுத்தித் தீராது என்பதாக கூறியதுதான் நினைவுக்கு வருகின்றது. அதேமாதிரி வாப்பா நாயகமவர்களிடம் பைஅத் பெற்றதற்கும் முரீதாக வாழ்வதற்கும் அதுபோன்று நாமும் தலைகீழாகவும் கால் மேலாகவும் பத்து நூறு ஆண்டுகள் நன்றி தெரிவித்தாலும் நன்றிக்கடன் செலுத்தி முடிக்க முடியாது. இதெல்லாம் பிறவிப் பாக்கியம், பிறவிப் புண்ணியம்தான். இதன் மூலமாகத் தான் நமக்குக் கிடைத்தது. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு காரணத்தில் கிடைத்திருக்கிறது.*

*அத்தகைய பாக்கியம் பெற்ற நம் அனைவரையும், நம் குடும்பத்தார் அனைவரையும் நமது சங்கைக்குரிய வாப்பா நாயகமவர்கள் இம்மையிலும் மறுமையிலும் அவர்களைச் சேர்ந்தவர்களாக ஆக்கிவைத்துக் காப்பாற்றுவார்களாக... ஆமீன் என்று கூறிக்கொண்டு, எனது உரையை நிறைவு செய்கின்றேன். வஸ்ஸலாம்.* ***(விழா உலா வரும்...)***

**தொகுப்பு : இளங்கவி.அ.நைனார் முஹம்மது அன்சாரி,M.A., MLIS.,**
**ஹக்கிய்யுல் காதிரிய் திருச்சி**

## கலைஞரின் பெயர் ரகசியம்.

ஒரு நூற்றாண்டுக்குமுன் திருவாரூரில் வாழ்ந்து மறைந்தவர் முஹம்மது இப்றாஹீம் எனுப் பெயர் கொண்ட குரு, கருணையானந்த பூபதி என்கிற சர்வ சமயத் துறவி. அவர் மணிமுத்து நாயகம் என்ற புனைப் பெயரிலும் எழுதியுள்ளார். கருணையானந்த ஞான பூபதியின் சீடராக அத்யந்த பக்தர்களாக இருந்தவர்களில் தி.மு.க. தலைவர் கருணாநிதியின் தந்தையும் ஒருவர். அவரது நினைவாகத்தான் தனது மகனுக்கு கருணாநிதி என்று பெயர் சூட்டினார்.

கருணாநிதி அவர்கள் பேட்டியின் போது ...

கேள்வி: திருவாரூரில் கருணையானந்த பூபதி என்ற சித்தர் இருந்ததாகவும் அவருடைய நினைவாக உங்கள் பெற்றோர் கருணாநிதி என்று பெயரிட்டதாகவும் கேள்விப்பட்டோம் இது உண்மையா?

பதில் : உண்மைதான் என்னுடைய தந்தை கருணையானந்த பூபதி என்ற சித்தரிடம் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அவர் நினைவாகத்தான் எனக்குப் பெயர் சூட்டினார். அந்த சித்தரின் மகன் கருணை எம். ஜமால்தான் முதன் முதலில் முரசொலியை அச்சடித்துக் கொடுத்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞரின் இலக்கியப் பேட்டியிலிருந்து...

நன்றி: இனிய உதயம் (ஜனவரி 2013)



# மதுரஸா நன்கொடை



**மதுக்கூர்**

கலீபா முஸ்தபா அவர்கள் நல்வாழ்வுக்கு துஆ செய்ய நன்கொடை ரூ.2000/-ம்,

மர்ஹூம். வி.எஸ். அஜீஸ் ரஹ்மான் 3 ஆம் நாளை முன்னிட்டு துஆ செய்ய மதியவிருந்து அளிக்க நன்கொடை ரூ.15000/-ம்,

மர்ஹூம். வி.எஸ். அஜீஸ் ரஹ்மான் மறுமை வாழ்வுக்குதுஆ செய்ய நன்கொடை ரூ.5000/-ம்,

லண்டன் செய்யதுல்லாஹ் புதுமனை புகுந்தமைக்கு துஆ செய்ய ரூ.500/-ம்,

ஷேக் பரீது சுமையா பானு மகள் மன்ஸீரா 3 ஆவது பிறந்த நாளை முன்னிட்டு பிள்ளையிள் நல்வாழ்வுக்கு துஆ செய்ய நன்கொடை ரூ.2000/-ம்,

ஏ.என்.எம். முஹம்மது யூசுப் மன நிறைவுக்கு துஆ செய்ய நன்கொடை ரூ.20000/-ம்,

ஓ.பி. யூ.எம். ஹாஜா நன்கொடை ரூ.1000/-ம்,

எம். முஹம்மது தாவூது அவர்களின் பேத்தி ஃபைஹாவின் உடல் நலத்திற்கும் துஆ செய்ய ரூ. 1000/-ம்,

பி. ஆயிஷா பேகம் மகன் பி.ஷமீர் முதல் மாத சம்பளத்தில் சிறப்பாக வாழ துஆ செய்ய நன்கெடை ரூ. 1000/-ம்,

ஜின்னா நாட்ட தேட்டங்கள் நிறைவேற துஆ செய்ய நன்கொடை ரூ. 2000/-ம்,

ஹாஜா மைதீன் தமது பிள்ளைகள் சித்தி அதிய்யா. ஹெச். மப்ளூல் நல்வாழ்வுக்கு துஆ செய்ய ரூ. 3000+1500+4500/-ம்,

ஏ.முஹம்மது இப்றாஹீம் வீடு குடி புக நன்கொடை நல்வாழ்வுக்கு துஆ செய்ய 1000/-ம்,

எம்.அப்துல் நாசர் இருமாத நன்கொடை 600/-ம்,

மர்ஹூம். ஏ. முஹம்மது தாஹிர் அவர்கள் வருட பாத்திஹாவை முன்னிட்டு நன்கொடை 2000/-ம்,

ஏ. நூர் ஜஹான் உடல் நலத்திற்கு துஆ செய்ய நன்கொடை ரூ. 500/-ம்,

எம்.அப்துல் கரீம் தமது பேரர் அப்துல் கபூர் கான் பிறந்த நாளை முன்னிட்டும், வெளிநாடு சென்று படிக்கவும் வாப்பா நாயகம் அவர்களின் பாதுகாப்பு வேண்டியும் துஆ செய்ய ரூ. 1000/-ம்

வழங்கினர். வழங்கிய வள்ளல்களுக்கு அல்லாஹ் அவர்களின் நாட்ட தேட்டங்களைப் பூர்த்தி செய்வானாக.

பிரபஞ்சத்திற்கோர் அருட்கொடை அண்ணலெம் பெருமானார் கண்மணி நாயகம் முஹம்மதுர் ரஸூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் புனிதமிகு பிறந்த தினத்தை முன்னிட்டு

**திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி- இ.எம்.எஸ். மீடியா இணைந்து நடத்தும்**

# மாநிலம் தழுவிய

# அல்ஹஸனைன் மாபெரும் கிராஅத் போட்டி 2023

## போட்டி நாட்கள்: 13.09.2023 -14.09.2023

போட்டி நடைபெறும் இடம்:

**திருச்சி மதுரஸத்துல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி- திருச்சி**

**முதல் பரிசு: ரூ.1 இலட்சம்**

**இரண்டாம் பரிசு : ரூ. 75 ஆயிரம்**

**மூன்றாம் பரிசு: ரூ. 50 ஆயிரம்**

**சிறப்புப் பரிசுகள் : 7 பேருக்கு தலா ரூ. 10000/-**

**ஆறுதல் பரிசுகள் : 20 பேருக்கு தலா ரூ. 1000/-**

*விண்ணப்பங்கள் வந்து சேரவேண்டிய கடைசி நாள்:*20.08.2023
விண்ணப்பங்களை கூரியர் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:
மீலாதுன்னபீ விழாக்குழு 2023, மதுரஸதுல் ஹஸனைன் ஃபீ ஜாமிஆ யாஸீன் அறபுக்கல்லூரி, சீத்தப்பட்டிபிரிவு, ஜே.ஜே.கல்லூரி அருகில், பூலாங்குளத்துப்பட்டி (அஞ்சல்) திருச்சி -620009

விதிமுறைகள், விண்ணப்பப்படிவம் மற்றும் விபரங்களுக்கு...

**jamiayaseen.com** **www.emsmedia.net**

தொடர்பு கொள்ளவேண்டிய அலைபேசி எண்கள்


94439 36921, 98411 11367, 9534 32070,99437 86269

பரிசுகள் 8.10. 2023 மதுரஸாவில் நடைபெறும் மீலாது விழாவில் வழங்கப்படும்.

Registered with R.N.I. No. TNTAM / 2009 / 27865
Postal Registration No. DDL / 08 / 2021 - 2023
Date of Publication on 7th, Posted on 10th, of Every Month at H.P.O. Dindigul



## தர்ஜுமத்துல் குர்ஆன் - மஅத் தஃப்ஸீரி - வத்தப்ஸீர்

குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் நாயகம் அவர்களின் தெளிவான தமிழ் மொழி பெயர்ப்பு - விளக்க உரை - தெளிவுரை - ஆன்மீக விளக்கக் குறிப்புகளுடன் கூடியது. தமிழில் இதுவரை வெளி வராத அற்புத படைப்பு. விலை ரூ.100 - (கொரியர் செலவு தனி)



## அரபு - தமிழ் (காமூஸ்) அகராதி

குத்புல் ஃபரீத் ஜமாலிய்யா அஸ்ஸையித் யாஸீன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் (ரலி) அவர்களின் கை வண்ணத்தில் உருவாகி, குத்புஸ்ஸமான் ஜமாலிய்யா அஸ்ஸையித் கலீல் அவ்ன் மௌலானா அல்ஹஸனிய்யுல் ஹுஸைனிய்யுல் ஹாஷிமிய் அவர்கள் புதிய சொற்கள் இணைத்துப் பதிப்பித்த அருமையான கலைக் கருவூலம். அறபுக் கல்லூரி ஆசிரியர்கள் - மாணவர்கள் - ஆலிம் பெருமக்கள் அனைவரது கைகளிலும் தவழ வேண்டிய அற்புதமான அகராதி. இரண்டு பாகங்கள் விலை ரூ.500 (கொரியர் செலவு தனி)




தொடர்புக்கு : 98940 94490
99445 76165


Owned by Awniyya World Peace Trust Published by
J. Mohamed Rahmathulla B.A.B.Com.,Fakira Complex, 74, Palani Road,
Dindigul - 624001.Printer : R.VijayalakshmiPrinted at
Sri Agni Amman Printers,52, Palani Road, Near Sakthi Theatre, Dindigul - 624001.
Editor S. Hussain Muhammad Manbayee